யாழ்ப்பாணம்

விலை ரூபா: 5.00 | பக்கங்கள்:-பத்து | Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

சங்கு 03 | வள்ளுவர் ஆண்டு 2033 | ஐப்பசி04 திங்கட்கிழமை (21.10.2002) | தொலைபேசி~ 2223378 | ஒலி 306

# மானுடத்தின் தமிழ்க் கூடல் மண்டபத்திற்குள் ஆயுதத்துடன் நுழைய முற்பட்ட புளொட் உறுப்பினர் பிடிக்கப்பட்டார் !

## கண்காணிப்புக் குழுவிடம் ஒப்படைத்ததாக புலிகள் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மானுடத்தின் தமிழ்க் கூடல் மாநாடு நடைபெறும் யாழ் வீரசிங்கம் மண்டபத்துக்குள் நேற்று கைத் துப்பாக்கியுடன் அத்துமீறி நுழைய முற்பட்ட புளொட் அமைப்பின் உறுப்பினர் ஒருவர் நிகழ்வின் ஒழுங்கமைப்பாளர்கள் மற்றும் பார்வையாளர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

மடக்கிப் பிடிக்கப்பட்டவர் புளொட் அமைப்பைச் சேர்ந்த ஜெயா மாஸ்ரர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பிரஸ்தாப நபரையும் அவரது கைத் துப்பாக்கியையும் விழா ஒழுங்கமைப பாளர்கள் விழா மண்டபத்தில் இருந்த விடுதலைப்புலி உறுப்பினர்களிடம் ஒப்படைத்ததாகவும் பிரஸ்தாப நபரையும் அவரது கைத் துப்பாக்கியையும் புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு அமைவாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் தாம் ஒப்படைத்ததாகவும் புலிகள் மேலும தெரிவித்துள்ளனர்.

மானுடத்தின் தமிழ்க் கூடல் மாநாட்டின் இரண்டாம் நாளான நேற்று பிற்பகல் 5 மணியளவில் நிகழ்வு நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது மண்டபத்துக்குள் பிரஸ்தாப நபர் நுழைய எத்தனித்ததாகவும்,

அப்போது மண்டப ஒழுங்கமைப் பாளர்கள் அவரிடம் உள்ளே செல்வதற்குரிய அழைப்பிதழைக் கேட்டதாகவும் மது போதையில் நின்ற பிரஸ்தாப நபர் அதனையும் மீறி உள்ளே செல்ல முற்பட்ட போது அவரது இடுப்பில் மறைத்து வைத்திருந்த துப்பாக்கியை மண்டப ஒழுங்கமைப்பாளர்கள் பார்த்து விட்டு பரபரப்பு அடைந்ததால் பிரஸ்தாப

(10ம் பக்கம் பார்க்க)

### நேற்று கொழும்பு வந்து சேர்ந்த

# நோர்வே பிரதி அமைச்சர் "பிரபாவை" சந்திப்பார்!

## செவ்வாய்க்கிழமை யாழ். விஜயம்

(நமது நிருபர்)

**தாய்லாந்தில் நடைபெறவுள்ள இரண்டாம் கட்ட சமாதானப் பேச்சு வார்த்தைகள் குறித்த விடயங்களை ஆராய்வதற்கென நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் நேற்று கொழும்பு வந்து சேர்ந்துள்ளார். கொழும்பு வந்து சேர்ந்துள்ள விடார் ஹெல்கீசன் நாளை செவ்வாய்க் கிழமை முதன்முறையாக ஏ-9 கண்டி வீதியூடாக யாழ்ப்பாணம் வரவுள்ளதுடன் நாளை மறுதினம் புதன்கிழமை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை முதற் தடவையாக வன்னியில் சந்தித்துப் பேசவுள்ளார்.**

நேற்றுக் காலை 3.45மணிக்கு கட்டுநாயக்கா விமானநிலையத்தில வந்திறங்கிய பிரதி வெளி விவகார அமைச்சர் விடார் ஹெல்கீசனை நோர்வேத்தூதுவர் ஜோன்வெஸ்பேக், தூதரக அதிகாரி தோமஸ் ஆகியோர் வரவேற்றனர்.

பரதி வெளிவிவகார அமைச்சர் நேற்றுக் கொழும்பு வந்திறங்கிய கையோடு அம்பாந்தோட்டைக்கு விஜயம் செய்து அங்கு வறடசியால் பாதிக்கப்பட்ட பகுதியையும் நோர்வே அரசின் உதவியுடன் நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்களையும் பார்வையிட்டனர்.

**அரச - எதிர்க்கட்சி தலைவர்களுடன் சந்திப்பு**

இதனையடுத்து பிரதி அமைச்சர்

(10ம் பக்கம் பார்க்க)

### அம்பாந்தோட்டைக்கு ஹெல்கீசன் விஜயம்

# எமது கட்சி உறுப்பினரை புலிகள் பலவந்தமாக கைது செய்தனர்

## புளொட் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் தமது கட்சியைச் சேர்ந்த யாழ் மாநகர சபை உறுப்பினர் ஜெயாமாஸ்ரர் (ஜெயச் சந்திரன்) என்பவரை பலவந்தமாக கைது செய்து கடுமையாகத் தாக்கியுள்ளதாக புளொட் அமைப்பினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

பிரஸ்தாப நபர் தனது நண்பருடன் மோட்டார் சைக்கிளில் யாழ்ப்பாணம முனியப்பர் கோவில் பகுதியால் வந்து கொண்டிருந்ததாகவும் வழியில் நண்பர் ஒருவருடன் நின்று கதைத்துக்கொண்டிருக்கும் போது அவ்விடத்துக்கு விரைந்து வந்த புலி உறுப்பினர்கள் ஜெயா மாஸ்ரரை பலவந்தமாகப் பிடித்து வான் ஒன்றில ஏற்றிச் சென்றதாகவும் மறறைய நபரையும் புலி உறுப்பினர்கள் பிடிக்க முற்பட்டபோது அவர் அவர்களிடம் இருந்து தப்பி தமது யாழ் கட்சி அலுவலகத்தை வந்தடைந்ததாகவும் புளொட் அமைப்பினர் நேற்றிரவு தெரிவித்தனர்.

அவ்வமைப்பினர் மேலும் தெரிவிக்கையில்:-

இச்சம்பவம் குறித்து போர் நிறுத்த

(10ம் பக்கம் பார்க்க)

# கண்காணிப்புக் குழுத்தலைவர் இன்று வன்னிக்குச் செல்வார்

(கிளிநொச்சி)

சர்வதேச யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் மேஜர் ஜெனரல் ரொண்ட்பியூரி ஹெவ்டே இன்று வன்னிக்கு விஜயம் செய்யவுள்ளார்.

வன்னிக்கு விஜயம் செய்யும் யுத்த நிறுத்தக்கண்காணிப்புக் குழுத தலைவர் கிழக்கு மாகாணத்தில் அமபாறை அக்கரைப்பற்று, மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களில அண்மையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாகவும் தற்போது நிலவும் பதற்ற நிலை குறித்தும் விடுதலைப்புலிகளின் முக்கிய பிரமுகருடன் கலந்துரையாடவுள்ளார். (ம)

# வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு

தட்வையாக வன்னியில் சந்தித்துப் பேசவுள்ளார்.

நேற்றுக் காலை 3.45மணிக்கு கட்டுநாயக்கா விமானநிலையத்தில வந்திறங்கிய பிரதி வெளி விவகார அமைச்சர் விடார் ஹெல்கீசனை நோர்வேத்தூதுவர் ஜோன்வெஸ்பேக், தூதரக அதிகாரி தோமஸ் ஆகியோர் வரவேற்றனர்.

பரதி வெளிவிவகார அமைச்சர் நேற்றுக் கொழும்பு வந்திறங்கிய கையோடு அம்பாந்தோட்டைக்கு விஜயம் செய்து அங்கு வறடசியால் பாதிக்கப்பட்ட பகுதியையும் நோர்வே அரசின் உதவியுடன் நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்களையும் பார்வையிட்டனர்.

**அரச - எதிர்க்கட்சி தலைவர்களுடன் சந்திப்பு**

இதனையடுத்து பிரதி அமைச்சர்

(10ம் பக்கம் பார்க்க)

சர்வதேச யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் மேஜர் ஜெனரல் ரொண்ட்பியூரி ஹெவ்டே இன்று வன்னிக்கு விஜயம் செய்யவுள்ளார்.

வன்னிக்கு விஜயம் செய்யும் யுத்த நிறுத்தக்கண்காணிப்புக் குழுத

பாறை அக்கரைப்பற்று, மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களில அண்மையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாகவும் தற்போது நிலவும் பதற்ற நிலை குறித்தும் விடுதலைப்புலிகளின் முக்கிய பிரமுகருடன் கலந்துரையாடவுள்ளார். (ம)

**அம்பாந்தோட்டைக்கு ஹெல்கீசன் விஜயம்**

# நோர்வேக்கு எதிராக ஜே.வி.பி ஆர்ப்பாட்டம்

(அம்பாந்தோட்டை)

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் நேற்று அம்பாந்தோட்டைக்கு விஜயம் செய்த போது அம்பாந்தோட்டை செயலகத்திற்கு முன் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) நோர்வேக்கு எதிரான கோசங்களை எழுப்பி ஆர்பாட்டத்தில் ஈடுபட்டது.

நோர்வே அரசின் உதவியுடன அம்பாந்தோட்டை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களைப் பார்வையிடுவதற்கு சென்ற போதே ஜே.வி.பியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

(10ம்பக்கம் பார்க்க)

# வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு தனித்தனி ஆளுநர்களை நியமிக்குக

**மஹாஜன பெரமுன செயலர் கோரிக்கை**

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் அமைதியை ஏற்படுத்துவதற்கு வடக்கிற்கும் கிழக்கிற்கும் தனித்தனியாக ஆளுநர்களை அரசாங்கம் நியமிக்க வேண்டும் என்று சிங்கள மஹாஜன பெரமுன கோரிக்கை விடுத்துள்ளது.

இது பற்றி பெரமுனவின் செயலாளர் வண.எல்லே குணவண்ஸ தேரர கூறுகையில் இணைக்கப்பட்டிருக்கும் வடக்கு கிழக்கு மாகாணங்கள் வேறாக்கப்பட்டு தனித்தனியான ஆளுநர்கள் நியமிக்கப்படும் பட்சத்தில் புலிகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள கிழக்கில் அமைதி ஏற்படும் எனத் தெரிவித்தார்.

ஸ்கண்டிநேவிய நாடுகளின் கணகாணிப்பு குழுவினர் சிங்கள மக்களை அமைதி பேணுமாறு கேட்டுவருகின்றனர். ஆனால் தமிழ் மக்களையும், பாடசாலை மாணவர்களையும் அவ்வாறு கேட்கவில்லை.

நாம் கிழக்கு மாகாணத்தில் அலுவலகமொன்றை திறந்திருக்கின்றோம். புலிகளால் துன்புறுத்தப்படும் சிங்கள, முஸ்லிம் மக்கள் தமது குறைகளை அங்கு தெரிவிக்கலாம் எனவும் தேரர் மேலும் தெரிவித்தார். (இ)

# இலங்கையில் இரண்டு படைகள் என்ற அடிப்படையிலேயே சமாதானப் பேச்சு

**மானுடத்தின் தமிழ்க் கூடல் நிகழ்வில் புலித்தேவன் உரை**

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் தமது சொந்த மண்ணில் உரிமையுடன் கூடிய இயல்பு வாழ்க்கையை வாழவும் சுதந்திரக் `காற்றை சுவாசிக்க வேண்டும் என்பதில் தலைவர் பிரபாகரன் உறுதியாக உள்ளார். இவ்வாறு விடுதலைப்புலிகளின் பிரமுகர் புலித்தேவன் தெரிவித்தார்.

நேற்றைய தினம் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற மானுடத்தின் தமிழ்க்கூடல் -2002ன் இரண்டாம் நாள் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்;

சுதந்திரக்காற்றை சுவாசிப்ப தற்காக மக்கள் பட்ட கஷ்டம் சொல்லி மாளாது. தமிழ்மக்கள் கௌரவமாக வாழவேண்டும் என்பதில் தலைவர் தீர்க்கதரிசனமாக இருக்கிறார். இதனையே பேச்சுவார்த்தை மூலமாக அடைந்து கொள்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தாய்லாந்தில் நடைபெற்ற முதலாம்கட்ட பேச்சுவார்த் தையில் தமிழீழவிடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் பல முக்கிய விடயங்களை வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் இரண்டு இராணுவம் இரண்டுகடற்படை இதன் அடிப்படையிலேயே சமாதானப பேச்சுவார்த்தை நடைபெறும் இதனை தாய்லாந்து பேச்சுவார்த்தையில் அன்ரன்பாலசிங்கம் தெளிவாக வலியுறுத்தியுள்ளார்.

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம

### ஆங்கிலக்கல்வி

ஆண்டு 1ல் இருந்து மேற் படிப்புவரை இலக்கணம், கடிதம், கதைக்கப்பயில, ஆங்கிலம் பயிலுர் ஆண்டு 11இற்கு உட்பட்ட சகல மாணவர்கட்கு விஞ்ஞானம், கணிதம் தமிழ்ப்பாடங்கள் இலவசமாக பயிற்சி தலைமை ஆசிரியர் ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 K K S வீதி, யாழ்ப்பாணம (6130)

### தேவை

தனியார் வைத்திய நிலையத்தில் கடமை புரிவதற்கு பெண் தேவை அத்துடன் வீட்டு பணி செய்வதற்கும் பெண் தேவை முடிவுத்திகதி 31 - 10 - 2002 தொடர்பு விளம்பர இல. 240 மே/பா வலம்புரி (6131)


# தமிழ்மொழியில் தூய்மை பேணப்படவேண்டும் அந்நிய மொழிக்கலப்பு அகற்றப்படவேண்டும்

## தமிழீழ கல்விக்கழக பொறுப்பாளர் வே. இளங்குமரன்

(ஈச்சமோட்டை)

தமிழின் தூய்மை பேணப்படவேண்டும். அன்றாட வாழ்விலும் கலை, இலக்கிய நடைகளிலும் இதன் தூய்மை காக்கப்பட வேண்டும். அந்நிய மொழிகளின் கலப்பு களையப்பட்டு தமிழின் பெருமை பேணப்படவேண்டும்.

யாழ். வீரசிங்க மண்டபத்தில நேற்று இடம்பெற்ற மானுடத்தின் தமிழ்க் கூடல் இரண்டாம் நாள் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய தமிழீழக் கல்விக்கழக பொறுப்பாளர் வே. இளங்குமரன் தெரிவித்தார்.

தற்போதைய புதிய பாடத்திட்ட அமைவுகளிலே தமிழ் மொழிச்சொற்பிழைகள் அதிகம் காணப்படுகின்றன. இவற்றை நீக்கி சரியான சொற்களை பிரசுரிக்க வழி செய்யவேண்டும், இதில் கல்விமான்கள் பெரும் பங்காற்றவேண்டும்.

தற்காலத்தின் அறிவியல் வளர்ச்சியில் பல சொற்களுக்குத் தமிழில் பற்றாக்குறை நிலவுகின்றது. இதற்கு காரணம் நாம் எமது மொழியில் அறிவியற் சொற்களை உருவாக்கநடவடிக்கைகளை எடுக்காததேயாகும்.

எனவே, துறை சார்ந்த அறிஞர்களும், தமிழ் அறிஞர்களும் இணைந்து இப்புதிய அறிவியற்சொல் ஆக்கத்தில் முழுமையான பங்களிப்புக்களை வழங்கவேண்டும் இதில் தமிழக அறிஞர்களின் பங்கும் மிக முக்கியமானதாகும்.

### இழிவுபடுத்தும் மகாவம்சம்

மகாவம்சம் சிங்கள, தமிழ், இனங்கள் இரண்டையுமே இழிவுபடுத்துவதாக அமைந்துள்ளது இதில் பல பிழையான கருத்துக்களை உள்ளடக்கிய புனைகதைகள் காணப்படுகின்றன.

மகாவம்சம் கூறுவதற்குப் புறம்பாக இன்று இலங்கையில் கிடைக்கும் தொல்பொருள் சான்றுகள் தமிழர் இடை 2000க்கு முற்பட்ட ஆண்டுகளிலேயே இலங்கையில் வாழ்ந்ததை உறுதிசெய்கின்றன.

சிங்களவர் ஆரியர் என்பது தவறு தமிழர்களது திராவிட இனத்தைச் சேர்ந்தவர்களே சிங்களவர்களும் பௌத்த மதம் தனியே சிங்களவருடையதுமல்ல இது இந்தியாவில் பண்டைக் காலங்களில் தமிழர்கள் பின்பற்றியதற்கும் சான்றுகள் உள்ளன.

சிங்களவர் என இனம் உருவாவதற்கு மதத்தின்பால் தீவிர பற்றாளர்கள் தமது காழ்ப்புணர்ச்சிகளின் வெளிப்பாட்டைப் பயன்படுத்தி ஏற்படுத்திக் கொண்டபிரிவே

விஜயன் தான் முதன்முதல் இலங்கைத்தீவில் குடியேறிய மனித இனத்தவன் என்பதும் அப்போது இலங்கையில் வாழ்ந்தவர்களை இரத்தம் குடிக்கும் பிசாசுகள் என்பது மாதிரி கூறப்படுவதும் முழுத் தவறே.

இங்கு சிங்கத்தின் வழிவந்தவர்களே சிங்களவர்கள் என்பதும் சிங்களஇனத்தை இழிவுபடுத்தும் கட்டுக்கதைகளே.

எனவே மனிதவர்க்கத்தை பழித்துக் கூறுவதும் சிங்கள தமிழ் இனங்களை இழிவுபடுத்துவதுமாக பிழையான தரவுகளை கொண்டமைந்த மகாவம்சம் மீளாய்வுசெய்யப்படவேண்டியது தற்போது பல சிங்கள அறிஞர்கள் கூட இவ் ஆய்வுகளில் ஈடுபட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

துட்டகைமுனு எனும் மன்னன் போரிலிறந்தஎல்லாளத் தமிழ்மன்னனுக்கு நினைவுச் சமாதியமைத்து அதைகடந்து போகும்போது யாவரும் இறங்கி மரியாதைசெலுத்த வேண்டுமென கட்டளையிட்டு அதைநிறைவேற்றியும் வந்தான்.

ஆனால் எமது தமிழ்ப் போராளிகள் வீரமரணமான பின் விதைக்கப்பட்ட நினைவுச்சமாதிகளை சிங்களப் படைகள் சிதறடித்தமை பெரும் வேதனைக்குரியது.

இதைவிட பாரதியார் ஔவையார் போன்றதமிழ்ப் பெரியார்களின் சிலைகள்கூட சேதமாக்கப்பட்டுள்ளன.

எமதுவிடுதலைப் போராட்டம் சிங்களமக்களுக்கு எதிரானதல்ல இதை சிங்கள, தமிழ் ஊடகங்கள் மக்களுக்கு தெரிவிக்கவேண்டும் என்று தனது உரையில் குறிப்பிட்டார். (க-59(

## மானுடத்தின் தமிழ்க்கூடல் 2002

## மூன்றாம் நாள் நிகழ்வு

(இன்று திங்கட்கிழமை)

### காலை

**9 00-10,30 ஈகச்சுடர் ஏற்றல்**

விழாச்சுடர் ஏற்றல்
திரு சிவாஜிலிங்கம்
திரு. ஈ. சரவணபவன்

வரவேற்புரை
செல்வி தமிழ்விழி

சிறப்புரை
திரு. செ. வரதன்
விடுதலைப் போரும்
தமிழ்மன வெளிப்பாடும்

**10 3 -12 30 அமர்வு: திரைப்படம்**

தலைமை
ஞானரதன்

கட்டுரையாளர்கள்
திரு அ. யேசுராசா
தமிழ்த் திரைப்படங்களில் ஈழத்தமிழர் போராட்டச் சூழலின் வெளிப்பாடு.
பேராசியர் சுனில் ஆரியரத்ன
சிங்கள தமிழ் முரண்பாடுகளின் வெளிப்பாடுகள்

குறிப்புரைஞர்
திரு க. சட்டநாதன்
திரு விமல்சாமிநாதன்

**12 3 - 1.30 மதிய இடைவேளை**

**1.3 -3.3 பொது அமர்வு**

தலைமை
அம்மன்கிளி முருகதாஸ்

கட்டுரையாளர்கள்
திரு அ. சண்முகதாஸ்
விடுதலையை நோக்கிய திசையில்-தமிழ்மொழி
சோ. கிருஷ்ணராஜா
இலக்கிய விடுதலையும் மானுட விடுதலையும்
திரு க. அருந்தாகரன்
ஈழத்துத் தமிழ் நாட்டார் வழக்கியல்-ஓர் பரிமாண நோக்கு

குறிப்புரைஞர்
திரு. ஆ. கோடீஸ்வரன்
சிறப்புரை

**3.35-4 45 இயக்குநர் புகழேந்தி தங்கராஜ்**

**4.45-5.30 ஓவியர் ட்ராஸ்கி மருது**

**5 30-6.15 நிறைவுரை**

திரு. வே. பாலகுமரன்

**6 30-8 0 கலைநிகழ்ச்சி**

நாடகம்
கண்ணகி வழக்குரைத்தல்
பாரம்பரிய நாட்டுக்கூத்து

நெறியாள்கை
என். எஸ். மணியம்

## வேலணையில் உதை பந்தாட்டம்

(சுண்டுக்குளி)

வேலணை துறையூர் விளையாட்டுக் கழகமும், சனமூக நிலையமும், இணைந்து தீவக மட்டத்தில் நடத்தி வந்த 9 வீரர்கள் மாத்திரம் பங்குபற்றும் உதைபந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டங்களும் பரிசளிப்பு வைபவமும் கடந்த வாரம் நடைபெற்றன.

இப் போட்டியில் நயினை இஸ்லாம் விளையாட்டுக்கழக அணி அதனை எதிர்த்தாடிய துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழக அணியை 2:1 என்ற கோல் கணக்கில் பலத்த போட்டியின் பின் வென்று சம்பியன் ஆனது.

இப் போட்டித் தொடரில் சிறந்த வீரனாக இஸ்லாம் கழக வீரன் யசீர் அரபாத்தும், சிறந்த கோல்காப்பு வீரனாக ஐயனார் கழக வீரன் விஜயதாசும் தெரிவு செய்யப்பட்டனர்.

இப் போட்டியில் கலந்து கொண்ட 35 கழக அணிகளில் ஒழுக்கத்தில் அதிசிறந்த அணியாக துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழக அணி தெரிவுசெய்யப்பட்டது. (க-110)

## அரசஅதிகாரிகளின் கடமைகளை ஆராய விசேட குழு அமைப்பு

(கொழும்பு)

பிரதேச செயலாளர்கள் உட்பட அரசதிணைக்கள அதிகாரிகளுக்கு வழங்கப்படும் கட்டளைகள் முறையாக நிறைவேற்றப்படுகின்றதா என்பது பற்றிஆராய விசேட பிரிவுஒன்றை அமைக்க உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அலுக்அலுவிகார தீர்மானித்துள்ளார்.

பொதுமக்களால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தொடர்பாக செய்யும்முறைப்பாடுகள் குறித்து இக்குழுவினர் விசேடகவனம் செலுத்தவுள்ளனர்.

கிராமசேவையாளர் முதல் உயர்அதிகாரிகள் வரையான உத்தியோகஸ்தர்களின் சேவைகள் பொதுமக்களுக்கு கிரமமாக கிடைக்கும் வகையிலும் இவர்கள் நடவடிக்கை எடுக்கவுள்ளதுடன்;

அதிகாரிகளுக்கு வழங்கப்படும் உத்தியோக பூர்வதங்குமிடவசதிகள் மற்றும் எரிபொருள் கொடுப்பனவுகள் போன்ற பல முக்கியவிடயங்கள் பற்றி இக்குழுவினர் விசேட கவனம் செலுத்தவுள்ளனர் என அமைச்சர் தெரிவித்துள்ளார் (க-8)

★ சமாதான முயற்சிகள் பலமடைய

## ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸ் அரசுடன் இணைவதவசியம் அமைச்சர் ஹக்கீம்தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவினால் முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான நடவடிக்கைகளை பலப்படுத்துவதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் இணைந்து செயற்பட வேண்டும்.

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவவும் முஸ்லிம் விவகார அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் தலைவர்கள் கலந்துகொண்ட கூட்டமொன்றில் உரையாற்றும் போதேஅமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்;

கிழக்கு மாகாண முஸ்லிம் தலைவர்களின் கருத்துக்களை பரிசீலனை செய்த பின்னரே சமாதானம் தொடர்பான நிலைப்பாட்டை கட்சி தீர்மானிக்கும்.

கிழக்கு மாகாண தலைவர்கள் விடுத்து வந்த கோரிக்கைகளை தொடர்ந்தும் பரிசீலனை செய்வதென்றும் மற்றும் அம்மாகாண முஸ்லிம் சமுதாயத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது என்றும் ஹக்கீம் மேலும்தெரிவித்துள்ளார்.

தற்போது பாராளுமன்றத்தை பகிஷ்கரித்து வரும் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் பகிஷ்கரிப்பை கைவிட இணங்கியுள்ளார்கள் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (க-08)

## அமைச்சர்கள் குழு அம்பாறை விஜயம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட அசம்பாவிதச்சம்பவங்கள் தொடர்பாக ஆராய்வதற்காகஅமைச்சர்கள் குழுஒன்று அக்கரைப்பற்றுப் பிரதேசத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் ஒன்றைமேற்கொண்டுள்ளது.

பொருளாதார மறுசீரமைப்பு விஞ்ஞானதொழில்நுட்ப அமைச்சர் மெலிந்த மொறகொட, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ, சமாதான இணைப்புச் செயலகத்தின் தலைவர் பேணாட்குணதிலக ஆகியோர் அடங்கிய குழுவே அக்கரைப்பற்று பிரதேசத்திற்கு விஜயம் செய்தது அங்கு சென்ற இவர்கள் கலாசார மண்டபத்தில் தமிழ்முஸ்லிம் சமய, சமூகப் பிரமுகர்களின் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டனர். (க-5)

# தென் ஆபிரிக்க மக்களின் பிரச்சினையுடன்

# எமது பிரச்சினையை ஒப்பிடுவது தவறானது

## யாழ் பிரதேச செயலர் தெரிவிப்பு

(தென்மராட்சி)

தென் ஆபிரிக்காவில் வாழ்கின்றமக்களுடையபிரச்சினைகளுடன் எமது மக்களுடைய பிரச்சினைகளை ஒப்பிட்டுப் பார்ப்பது மிகவும் தவறான கணிப்பாகும்எமது சமுதாயத்தில் வாழ்கின்ற சிறுவர்களின் பிரச்சினைகள், கஷ்டங்கள் வித்தியாசமானவையாகும்.

யாழ்ப்பாணப்பிரதேசசெயலர் எஸ்.செந்தில் நந்தனன் யாழ்ப்பாணம் கூட்டுறவுக் கேட்போர்கூடத்தில் அண்மையில் இடப்பெற்ற சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் திட்ட அமுலாக்கல் நிகழ்வில் டங்குகொண்டு உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் இயக்குநரும் அதிபருமான திருமதி வேதநாயகம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வடமராட்சி, வலிகாமம், தென்மராட்சி பிரதேசங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 39 பிள்ளைகளுக்கு கல்வி உபகார நிதி வழங்கப்பட்டது.

பிரதேச செயலர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

இன்றைய கால சட்டத்தில் தமிழ் மக்கள் பல்வேறுபட்ட பாதிப்புக்களை அனுபவித்து வருகின்றனர். முக்கியமாக பிள்ளைகளும் பெண்களும் கூடுதலான பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இந்த நிலையில் சிறுவர் அபிவிருத்திநிலையம்போன்ற நிறுவனங்கள் தம்மால் முடிந்த அளவில் பணிகளை ஆற்றமுன்வர வேண்டும். இன்றும் எம் மத்தியில் பல பெற்றோர்கள் தமது பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்பாமல்தொழிலில் ஈடுபடுத்தி வருகின்றனர். இந்த அவல நிலையைப் போக்குவதற்கு நாம் பாடுபட வேண்டும். அத்துடன் எம் மத்தியில் பருவமடையாத வயதினில் பெண்கள் தாயாகிவிடுகின்ற நிலையும் காணப்படுகின்றது இது மிகவும் தவறான போக்காகும் என்றுகுறிப்பிட்டார்,

சிறப்பு விருந்தினராகப் பங்கு கொண்டிருந்த பிரபல எழுத்தாளரும், வலிகாமம் வலய உதவிக்கல்விப் பணிப்பாளருமான திருமதி கோகிலா மகேந்திரன், மற்றும் நிலையத்தின்செயலாளர் ரீ பாலதயானந்தன் ஆகியோரும் உரையாற்றினர். (க-77)

## உரும்பிராய் பாடசாலைகளில் திருட்டுக்கள்

(கோப்பாய்)

உரும்பிராய் மற்றும் ஊரெழுப் பகுதிப் பாடசாலைகளில் திருட்டுச் சம்பவங்கள் அடிக்கடி இடம்பெறுவதாக இப்பகுதி பொதுமக்கள் தரப்பில்கவலைதெரிவிக்கபடுகிறது

இதுவிடயம் குறித்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்திலும்புகார்செய்யப்பட்டுள்ளது விரும்பத்தகாத இது போன்ற திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறுவதானது நமது சிறார்களின் கல்விக்கு நாமே இடையூறு ஏற்படுத்துவதற்கு சமமானது என்றுபலரும்வருத்தம் தெரிவித்துள்ளனர். (க-79)

# ஆயுத ரீதியான போராட்டத்தை தமிழினம் வலிந்து பெறவில்லை

## சி.வி. கே. சிவஞானம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அகிம்சை வழியில் போராடிய தமிழினம் பின்னர் ஆயுதம் ஏந்தவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. இதனை நாம் வலிந்து பெறவில்லை என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் சி. வி. கே. சிவஞானம்.

நேற்று முன்தினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற 'மானுடத்தின் தமிழ்கூடல்-2002' விழாவில் காலைநேர அமர்விற்கு தலைமை வகித்து உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்துப் அவர் உரையாற்றுகையில்;

இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் ஈழத்தமிழ் மக்களின் உரிமைகள் பறிக்கப்பட்டதனால் அவர்கள் தமது உரிமைகளிற்காக போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

ஆரப்ப காலங்களில் அகிம்சை வழியில் போராடிய தமிழினம் பின்னர் ஆயுதம் ஏந்திப் போராடும் நிலைக்கு தள்ளப்பட்டது.

தமிழ் தேசியம் என்பது ஒன்றும் புதிதான விடயம் அல்ல. இலங்கையில் வடக்கு-கிழக்கு பகுதிகள் தமிழ்பேசும் மக்களிற்கென ஒதுக்கப்பட்டதென்பது ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டதொன்று.

1947 ஆம் ஆண்டில் உள்ளூராட்சி சட்டம் மற்றும் இலங்கை-இந்திய ஒப்பந்தம் என்பவற்றின் மூலம் இதனைத் தெளிவாக உணர முடியும்.

இனிமேல் தென்னிலங்கை மக்களும் கருத்துப் பரிமாற்றத்தை நிகழ்த்த இதுபோன்ற மாநாடுகள் வழிவகுக்கும்.

இவ்வரலாற்றுச் சிறப்பு மிக்க மாநாட்டின் மூலம், கடந்த காலங்களைப் போல் அல்லாது நாம் தமிழர்கள் என்பதும் எமது கலை இலக்கிய பண்பாட்டு விழுமியங்களை சுதந்திரமாக வெளியிடவும் அதனை வேற்று இன மக்கள் குறிப்பாக சிங்கள சகோதரர்கள் புரிந்து கொள்ளவும் வழி பிறந்துள்ளது என்றார். (க-27)

## அரசு-புலிகள் பேச்சு

# பொ.ஐ.மு.இன்று ஆராய்வு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளும் அரசாங்கமும் மேற்கொண்டுவரும் சமாதான முயற்சிகள் குறித்து பொதுஜன ஐக்கியமுன்னணி இன்று விரிவாக ஆராயும்என கட்சியின் செயலாளர் ரி.எம்.ஜெயரட்ண தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் தலைமையில் இடம்பெறும் பொதுஜன ஐக்கியமுன்னணியின் மத்திய நிறைவேற்றுகுழுக்கூட்டத்தில் சமாதான நடவடிக்கைகள் பற்றியும் சமூகப்பொருளாதாரநிலைபற்றிஆராயப்படும் என்றும் அவர்மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த கூட்டத்தின்பின்னர் நாட்டின் சமூகப்பொருளாதாரநிலைபற்றியும் கட்சியின் எதிர்காலத் திட்டம்பற்றியும் மக்களுக்குபரவலாகஅறிவுறுத்தப்படும்என ரி. எம். ஜெயரட்ண அறிவித்துள்ளார். (க-7)

# பொது நிர்வாகத்துறை மறு சீரமைக்கப்படும்

## அமைச்சர் வஜிரா தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் பொதுநிர்வாகத்துறை மறுசீரமைக்கப்படயிருப்பதாக அமைச்சர்வஜிரா அபயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதற்கென உலகவங்கி நிதி வழங்க இணக்கம் தெரிவித்துள்ளதாக அவர் தெரிவித்ததுடன், நாட்டில் தற்போதைய நடைமுறையில் உள்ள பிரித்தானிய நாட்டினை ஒத்த பொதுநிர்வாக முறைமையினை மாற்றி அமைக்கவேண்டிய அவசியம் குறித்தும் அமைச்சர் வஜிரா வலியுறுத்தியுள்ளார்.

அம்பாறை டி. எஸ். சேனநாயக்கா மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற பொது நிர்வாக அமைச்சின் நடமாடும் சேவையின் ஆரம்பவைபவத்தில் உரையாற்றுகையில் இவ்வாறு அவர் தெரிவித்தார்.

பொதுநிர்வாகத்துறை மறுசீரமைக்க அனைத்துஅரசாங்க ஊழியர்களும் முழுமையான ஒத்துழைப்புவழங்கவேண்டும் என்றும் இதுதொடர்பாக சகல அரச ஊழியர்களுக்கும் விசேட பயிற்சிகள் வழங்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் சுகாதார போசனை, மற்றும் பொது நலன் அமைச்சர் டி. தயாரட்ண, வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் அசோக ஜெவர்த்தன போன்றவர்களும் கலந்துகொண்டனர். (க-7)

## ஊக்குவிப்பு பரிசுகள்

வர்த்தக வங்கியில் 'அருணலு'சேமிப்புக்கணக்கு வைத்திருக்கும் சிறார்களில் ஆண்டு-5 புலமைப்பரிசில் சித்தியடைந்து பாடசாலை மட்டத்தில் 1ம், 2ம், 3ம் இடங்களைப் பெற்றிருப்பின் வழமை போல் ஊக்குவிப்பு பரிசுகள் வழங்கப்படுமென அவ் வங்கியின் முகமையாளர் தெரிவித்துள்ளார்.

பரீட்சைப் பெறுபேற்றிற்குரிய சான்றுகளை வங்கியில் சமர்ப்பிக்குமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க)

## க. பொ. த (சாத) தமிழ்பகுதி-I விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1 | — 2 | 21 | — 4 |
| 2 | — 3 | 22 | — 1 |
| 3 | — 4 | 23 | — 1 |
| 4 | — 4 | 24 | — 2 |
| 5 | — 1 | 25 | — 3 |
| 6 | — 2 | 26 | — 4 |
| 7 | — 1 | 27 | — 1 |
| 8 | — 3 | 28 | — 2 |
| 9 | — 4,3 | 29 | — 2 |
| 10 | — 1 | 30 | — 2 |
| 11 | — 2 | 31 | — 3 |
| 12 | — 3 | 32 | — 1 |
| 13 | — 2 | 33 | — 4 |
| 14 | — 4 | 34 | — 1 |
| 15 | — 3 | 35 | — 4 |
| 16 | — 4 | 36 | — 4 |
| 17 | — 3 | 37 | — 3 |
| 18 | — 2 | 38 | — 2 |
| 19 | — 1 | 39 | — 2 |
| 20 | — 3 | 40 | — 1 |

அரச ஊழியர் எண்ணிக்கை

# மூன்றில் ஒரு பங்கினால் குறைக்கப்பட வேண்டும்

## சம்பள ஆணைக்குழு பரிந்துரை

(கொழும்பு)

அரச ஊழியர்களின் தொகையை மூன்றிலொரு பங்கினால் குறைக்க வேண்டும் என்று திஸ்ஸ தெய்வேந்திர சம்பள ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ளது.

இது தொடர்பான அறிக்கையை திஸ்ஸ தெய்வேந்திர ஆணைக்குழு அண்மையில் ஜனாதிபதியிடம் சமர்ப்பித்துள்ளது.

சம்பள அதிகரிப்புகளை வழங்கும் அதே வேளையில், அரச ஊழியர்களின் மொத்த தொகையை மூன்றிலொரு பங்கினால் குறைக்கவேண்டும்.

தற்போது உள்ளபடி அரசாங்க ஊழியர்கள் தேவையிலும் பார்க்க 30 சத வீதம் கூடுதலாக இருக்கிறார்கள்.

ஆணைக்குழுவின் சிபார்சுப்படி முதலாவது வருடத்தில் 5 சதவீத ஊழியர்களும் இரண்டாவது வருடத்தில் மேலும் 5 சதவீத ஊழியர்களும், 3 வது வருடத்தில் மீதம் உள்ள 20 சதவீத ஊழியர்களும் சேவையில் இருந்து குறைக்கப்பட வேண்டும்.

சம்பள அதிகரிப்புக்களும், ஊழியர் குறைப்புக்களும் 5 வருட காலத்துக்குள் பூர்த்தியடைய வேண்டும் என்பதுடன், இரு வருட காலத்துக்கு அரசாங்க சேவையில் உள்ள வெற்றிடங்கள் நிப்பப்படக் கூடாது என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி இவ்வறிக்கையை அமைச்சரவையில் சமர்ப்பித்ததும், பிரதமர் அதனை பகிரங்கமாக அறிவிக்கவுள்ளார்.

ஆனால், அரசாங்கசேவையில் இடம் பெறும் எந்தவித நியமனங்களையும் தடை செய்யும் சுற்றறிக்கையை நிதியமைச்சின் செயலாளர் ஏற்கனவே சகலதிணைக்களங்களிற்கும் அனுப்பிவைத்துள்ளார்.

அறிக்கையின் சிபார்சில், புதிய நியமனங்களுக்கு நிதி ஒதுக்கப்படவில்லை. அதிகரித்துவரும் வாழ்க்கைச் சுட்டெண்ணிற்கு ஏற்ப ஓரளவிலான சம்பள அதிகரிப்புக்களை மேற்கொள்ள வேண்டும்.

முதலில் ஆணைக்குழுவின் இச் சிபார்சு அமுல் செய்யப்படும் என்று பிரதமர் தெரிவித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் அரசாங்க ஊழியர்களில் 30 சதவீதமானோரை சேவையில் இருந்து விலக்கி விடக்கோரும் சிபார்சு தொடர்பாக ஜனாதிபதி மௌனம் சாதிப்பது குறித்து அரசாங்க ஊழியர்கள் கேள்வி எழுப்பியுள்ளார்கள்.

இந்த சிபார்சினை வெளியிடப்பட்டுள்ள திஸ்ஸ தெய்வேந்திர ஆணைக்குழுவை ஜனாதிபதியே நியமித்தார் என்றும், சம்பள அதிகரிப்புகளை ஜனாதிபதியே ஊக்குவித்தார் எனவும், அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (க-08)

# போக்குவரத்துக்கு உதவாத வாகனங்கள் சேவையில்

## பணிப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் தற்போது பாவனையில் உள்ள வாகனங்களில் எழுபத்தைந்து வீதமானவை போக்குவரத்துக்கு உதவாதவை என அறிவிக்கப்பட்டுள்ளது. இவைகளை அகற்றுவதற்கான சட்ட நடவாடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மோட்டார் வாகனத் திணைக்கள பணிப்பாளர் ஈ.ஜினதாஸ தெரிவித்துள்ளார்.

சாரதிகளின் கவனயீனம் காரணமாகவும் வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று போட்டியிட்டு ஓடுவதனாலேயும் வீதி விபத்துக்கள் அதிகம் ஏற்படுகின்றன.

இவ்வாறு தவறிழைக்கும் சாரதிகளின் தவறுகளுக்கு ஏற்றவாறு பத்து தவறுகள் நிகழுமிடத்து அவர்களின் சாரதி அனுமதிப்பத்திரம் தடை செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக மேலும் தெரிவித்துளளார். (க-03)

# மாற்று அரச கொள்கை கட்சிகள் பல நிராகரிப்பு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் மாற்று அரசாங்கக் கொள்கையினை சிறுபான்மை இனக்கட்சிகள் நிராகரித்துள்ளன.

அரசியல் அமைப்புத் சட்டத்திற்கு 19வது திருத்த சட்டத்தினால் ஏற்பட்டுள்ள தற்போதைய அரசியல் நிலைமையை அடிப்படையாக வைத்தே பொதுஜன ஐக்கிய முன்னணி இந்தக்கொள்கையினை முன்வைத்திருந்தது.

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷா எதிர்க்கட்சிக்கு எந்நேரத்திலும் மாற்று அரசாங்கமொன்றை அமைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும் எனத்தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது, (க08)

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரணதர) மாதிரிப் பரீட்சை — 2002

## General Certificate of Education (Ord. Level) Model Examination - 2002

*விஞ்ஞானம் - 1*
*ஒரு மணித்தியாலம்*


ஆக்கம்: திருமதி த. முருகையா B.A
(பயிற்றப்பட்ட விஞ்ஞானம்)

**கவனிக்க : i) எல்லா வினாக்ளுக்கும் விடை எழுதுக.**
**ii) 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01. ஆர்முடுகலுக்குரிய சர்வதேச அலகு எது?
i) $ms^{-1}$ ii) $mh^{-1}$ iii) $ms^{-2}$ iv) $mkm^{-1}$

02. வேலை செய்யும் விதம் எங்ஙனம் குறிப்பிடப்படும்?
i) சுவர் ஒன்றைத் தள்ளும் போது சுவரின் மீது
ii) மூட்டையை தலையில் சுமந்து செல்லும்போது மூட்டையின் மீது
iii) கிணற்றில் இருந்து நீரை அள்ளும் போது நீர் வாளி மீது
iii) மூட்டையை தோளில் சுமந்து செல்லும் போது மூட்டை மீது

03. புள்ளி A மீது இரு விசைகள் தாக்கும் போது இவற்றுள் A மீது 10N விசையை தரக்கூடியது எது?





04. அந்தமில் சங்கிலி மூலம் சக்தியை ஊடுகடத்தும் சாதனம்?
i) துவிச்சக்கர வண்டி ii) கடிகாரம்
ii) நெல்குற்றும் ஆலை iv) தையல் இயந்திரம்

05. மனித கண்ணில் விழித்திரையில் பார்வைக் கலங்கள் செறிந்த பகுதி எது?
i) கதிரொளி ii) மஞ்சட் பொட்டு iii) குருட்டிடம் iv) கண்மணி

06. தளவாடியால் உண்டாகும் விம்பத்தில் இயல்பாக அமையாதது.
i) விம்பம் மெய்விம்பமாக இருத்தல்
ii) விம்பம் பக்க நேர்மாறாகுதல்
iii) விம்ப அளவு பொருளினளவை ஒத்திருத்தல்
iv) விம்பம் எப்போதும் ஆடியின்பின்னால் அமையும்

07) ஒளியாக சக்தி வீணாகிப் போவது
i) பொருளில் உராய்வின் போது
ii) பொருள்களின் தொழிற்பாட்டில் அதிர்வு ஏற்படும் போது
iii) இழை மின்குமிழ் ஒளிரும் போது
iv) மண்ணெய் அடுப்பில் பூரண தகனத்தின் போது

08. குழிவாடியின் ஒளித்தெறிப்பை பிழையான முறையில் குறிப்பது எது?




09. பின்வருவனவற்றுள் திரவ மூலகம் எது?
i) Hg ii) Ag iii) pb iv) Au

10. குளிர் நீருடன் தாக்கம் புரியக் கூடிய மூலகம்?
i) Al ii) Fe iii) Na iv) P

11. ஓர் மூலகத்தின அணுக்கள்
i) சமநிறையுடையவை ii) சம எண்ணிக்கையான கருத்துளிகளுடையவை
iii) சம எண்ணிக்கையான நியூத்திரனை உடையவை
iv) சம எண்ணிக்கையான புரோத்திரனை உடையவை

12. Hg, $Co_2$ வளி ஆகியவற்றை முறையே காட்டுவது
i) மூலகம், கலவை, சேர்வை ii) சேர்வை மூலகம், கலவை
iii) மூலகம், சேர்வை, கலவை iv) சேர்வை, கலவை, மூலகம்

13. சலவைக்கல், கணவாய் ஓடு போன்றவற்றிலுள்ளது
i) $Na_2 Co_3$ ii) $CaCo_3$ iii) Cao iv) $NaHco_3$

14. A,B எனும் இரு மூலகங்களின் அணு எண் முறையே 11ஆம், 17ம் A,B இணைந்துருவாக்கும் சேர்வையின் சூத்திரம்
i) $A_2B_2$ ii) A B iii) $A_3B$ iv) $AB_2$

15. A எனும் மூலகத்தின் ஒட்சைட்டின் சூத்திரம் $A_2O_3$ Aயின் சல்பேற்றின் சூத்திரம்
i) $A_2(So4)_2$ ii) $A(So_4)_2$ iii) $A_3(So_4)_2$ iv) $A_2(So_4)_3$


16. $C_{16}H_{12}O_6$ சேர்வையின் சார் மூலக் கூற்றினளவு (C-12 , H-01, 0-16)
i) 24 ii ) 180 iii) 29 iv) 90

17. $1Mg + O_2 - 2MgO$ 24g Mg ஐ ஒட்சிசனில் எரிக்கத் தேவையான ஒட்சிசன் அளவு யாது?
i) $\frac{32}{48}$ x 24 g ii) $\frac{48}{32}$ x 24 g iii) $\frac{12 \times 24}{48}$g iv) $\frac{48}{16}$ x 24g

18. குறிப்பிட்ட அணுவின் கருவில் 10புரோத்தனும் 11 நியூத்திரனும் உள்ளன இவ் அணுவின் 1 மூலின் திணிவு
i) 10g ii) 11g iii) 21g iv) 31g

19. ஆவர்த்தன அட்டவணையில் 2ஆம் ஆவர்த்தன IIIஆம் கூட்ட மூலகம்
i) Na ii) Mg iii) B iv) Al

20. PNP திரான் சிஸ்டரின் குறிப்பது.




தொடரும்.....

## 18.10.2002 அன்று வெளியான தமிழ் வினாப்பத்திரத்தின் தொடர்ச்சி

தமிழ் மொழியும் இலக்கியமும் பகுதி III — 2 மணி

*முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம் வினாக்களுக்கும் 5,6,7 வரையுள்ள வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவுக்கும் விடை தருக.*

1. **பின்வரும் கூற்றுக்கள் ஒவ்வொன்றின் கீழும் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

அ) ''நமக்கு முன்பிங் குணவிலை யாயினும்
இமக் குலக் கொடி காகர்க்கினியவர்
தமக்கு நாம் இன் அடிசில் தகவுற
அமைக்கு மாறெங்ஙனே அணங்கே''
i) இக்கூற்று யாரால் கூறப்பட்டது? ii) இக்கூற்று யாருக்குக் கூறப்பட்டது?
iii) எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது? iv) இங்கு 'இமக்குலக் கொடிகாகர்' எனக்குறிப்பிடப்படுபவர் யார்?

ஆ) ''எனக்குறுந் தகுதி தந்த வியல்புறும் வல்ல நாயன்
தனக்குறும் வண்மை யெம் மோர் சாற்றுதற்கரிய காண்டும்
நினைக்குறுஞ் சேனையோடு நெழுங்களத்தமரில் வெம்போர் முனைத்திறம்
புரியினென்றார் மூவுலகுயர்த்துங் கோமான்''
i) இக்கூற்று யாரால் கூறப்படடது? ii) யாருக்குக் கூறப்பட்டது?
iii) எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது? iv) இங்கு 'மூவுலகுயர்த்துங் கோமான்' எனக் குறிப்பிடப்படுபவர் யார்?

இ) ''அங்(கு) இவன் மலையில் தேவர் தம்மைக் கண்(டு)அணைத்துக் கொண்டு
வங்கினைப் பற்றிப் போதா வல்லுடும்(பு)
என்ன நீங்கான்''
i) இக் கூற்று யாரால் கூறப்பட்டது? ii) யாருக்குக் கூறப்பட்டது?
iii) எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது? iv) இங்கு 'வங்கு எனக் குறிப்பிடப்படுவது எது?

ஈ) ''மகளே சகுந்தலா, இதோ உன் தந்தை நிற்கிறார், அவரை வணங்குவாயாக''
i) இக் கூற்று யாரால் கூறப்பட்டது? ii) யாருக்குக் கூறப்பட்டது?
iii) எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது? , iv) இதில் தந்தை எனக் குறிப்பிடப்படுபவர் யார்?

உ) ''எனக்கென்ன கேடு வந்துட்டுதா? இந்த ஒலகத்தில அறுவது வருசம் சீவியம் செஞ்சிட்டன்! ஒன்னைப்போல கொழந்தையா நான்?
i) இக்கூற்று யாரால் கூறப்பட்டது? ii) யாருக்குக் கூறப்பட்டது?
iii) எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது? iv) இப் பாத்திரத்தின் எவ்வுணர்வு கூறப்படுகிறது?

(20புள்ளிகள்)

2. **பின்வரும் செய்யுள்களின் பொருளை இக்கால உரைநடையில் எழுதி அவை ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்துக்களில் உள்ள தொடர்களின் சிறப்புக்களை விளக்கி எழுதுக.**

அ) மற்றவன் செயல் என்ன தன்மையதாக மாலயனான அக்
**கொற்ற ஏனமும் அன்னமுந் தெரியாத கொள்கையராயினார்**
பெற்ற மூர்வதும் இன்றி நீடிய பேதையாளுடன் இன்றி ஓர்
நற்றவத்தவர் வேடமேகொடு ஞாலம் உய்ந்திட நண்ணினார்.

ஆ) எண்ணருந் துயர்க்கெலா இறுதி காட்டுமெய்ப்
**புண்ணிய முருக்கொடு பொலிந்திலங்கிய**
வண்ணமென் றுணர்வுளர்ர மனங்களிப்புற
நண்ணின னிருஞ் சுவிசேஷ நாமத்தன்

இ) நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல் மேல் எழுத்துப் போற் காணுமே - அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம்
**நீர்மேல் எழுத்துக்கு நேர்.**

ஈ) நல்லை, நல்லை, அறச்சமர்த்தி நீயே கண்டேன்,
நன்னுதலார் அனைவரிலும் இந்திரசாலம்
வல்லை, வல்லை, விறகுகளும் களவே ; செம்பொன்
மங்கல நாண் உன் கழுத்தில் இருக்க, ஏதும்
இல்லை எனச் சொல்லுவது சற்றும் ஏலாது,
இதனை எனக்(கு) ஈவாய் என்(று) இயம்ப, வேடர்
**பல்லம் உயிர் நிலை வாயில் பட்ட மான் போல்**
பதைபதைத்துப் பைந்தொடியாள் பதறி வீழ்ந்தாள்

உ) சொற்ற வார்த்தையைக் கேட்டலும், தொல்லுயிர்
**முற்றும் உண்பது போலும் முனிவினான்**
பற்றுமின் கடிதின்; நெறும் பார்மிசை
எற்றுமின் என நால்வரை ஏவினான் (20 புள்ளிகள்)

3. **பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை விளக்குக.**
அ) இளையான் குடி மாற நாயனாரின் சிவபக்தி
ஆ) ஆதம் விசாரியின் மனநிலை
இ) பூங்குன்றன், இளநாகன் இருவரின் நேர்மைக் குணம் (15புள்ளிகள்)

4. **பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு விடைதருக.**
அ) காவியத்தலைவி கதீஜா நாயகியைப புகழ்ந்து கூற உமறுப் புலவர் உவமைத் தொடர்களைக் கையாள்கிறார். ஆராய்க.
ஆ) ''தங்கம்மாவின் வறுமை நிலை அளவிடற்கரியது'' விரித்துரைக்க
இ) ''கடலை நம்பி...'' கவிதையில் மீனவரின துன்பநிலை - விளக்குக. (15புள்)


*5,6,7 ஆகிய வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவுக்கு மட்டும் விடைதருக.*

5. **'நமுறூது அழிவுண்ட படலம்' என்னும் பகுதியை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் வினாக் களுக்கு விடை எழுதுக.**
அ) நமுறூதின் படைகள் போருக்குச் செல்லும் காட்சியைப் புலவர் எவ்வாறு வர்ணிக்கிறார்?
ஆ) அவனின் குணவியல்பினைத் தெளிவுபடுத்துக (10புள்ளிகள்)

6. **அங்கதன் தூதுப்படலம் என்னும் பகுதியை ஆதாரமாகக் கொண்டு பின்வரும வினாக் களுக்கு விடைஎழுதுக.**
அ) இராவணனிடம் தூது சென்ற அங்கதனை இராவணன் நீயார் என்று கேட்கும் போது அங்கதன் தன்னை எவ்வாறு அறிமுகப்படுத்துகிறான்?
ஆ) இராவணன் இனிப்போர் செய்ய வரமாட்டான் என்பதற்கு இராமன் கூறிய காரணங்கள் என அங்கதன் கூறியவை எவை? (10 புள்ளிகள்)

7. **கணையாழி என்னும் பாடப்பகுதியை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**
அ) சகுந்தலை மீது கண்ணுவ முனிவர் வைத்திருந்த பாசம்
ஆ) கணவனிடம் செல்லும் சகுந்தலையின் மனநிலை. (10புள்ளிகள்)

## 17.10.2002 அன்று வெளிவந்த கணிதப் பாடத்திற்கான விடைகள்

01. $\frac{37.50}{2}$ = ரூ18.75
02. $\frac{2}{3}, \frac{3}{4}, \frac{4}{5}$
03. 0.79 - 0.423 = 0.367
04. ரூபா (a - 10)
05. 0.078
06. AN - $\sqrt{3}$ அலகு
07. $x^{10+(-4)}$ $x^6$
08. $y = xb - xa$
09. $A \cap B'$
10. படித்திறன் ≐ (- 3)
11. 5
12. $x = 2$
13. $x = 75^0$
$y = 75^0$
14. 0:9
15. XY:NO = 1:2
16. 2.828
17.


18. ஆரை r = 14m
19. i) ஆகாரம் = 6
ii) இடையம் = 5
20. i) $x = 30^0$
ii) $A\hat{C}D = 120^0$
21. மாறா உறுப்பு = 9
$(x - 3)2$
22. 11 $\frac{1}{4}$ நிமிடம் or (11நிமிடம் 15வினாடி)
23. 1:4
24. திசைகோள் $035^0$
25. விற்றவிலை = ரூ.352
26. $A\hat{D}B = 130^0$
27. $y = -2x + 3$
28. பரப்பளவு = $106cm^2$
29. i) 1.732
ii) 5.196
30. Oவை மையமாகவும் 3cm ஆரையாகவும் உடைய வட்டத்தின் பரிதியாகும்.

# இன்று ஒரு தகவல்

## பெண்ணின் பெருமை

'அறிவில் சிறந்தவர்கள் ஆண்களா பெண்களா'? என்னுடைய நண்பர் ஒருவரைப்பார்த்து நான் கேட்ட கேள்வி இது. 'அதிலே என்ன சார் சந்தேகம்? அவர்கள் தான்' அனுபவ அடிப்படையில் அவர் இப்படிச் சொல்கிறார். அறிவியல் அடிப்படையில் பார்க்கிறவர்களும் இப்படித்தான் சொல்கிறார்கள். இயற்கையின் நோக்கம் இனப்பெருக்கம். இதிலே பெண்களின் பங்கு அதிகம், எனவே, இயற்கையே பெண்களுக்குப் பல சலுகைகளைக் கொடுத்திருக்கிறது... சக்தியைக் கொடுத்திருக்கிறது.

வெளிநாடுகளிலே இதைப் பற்றியெல்லாம் நிறைய ஆராய்ச்சிகள் செய்து பார்த்திருக்கிறார்கள். புள்ளிவிபரங்கள் எல்லாம் வெளியிட்டிருக்கிறார்கள். ஆண்குழந்தைகளை விட பெண்குழந்தைகள் முன்னதாகவே பேச ஆரம்பித்து விடுகிறார்களாம். அது மட்டுமல்ல, அதிக எண்ணிக்கையில் வார்த்தைகளைக் கற்றுக் கொள்வது பலவிதமான வாக்கிய அமைப்புகளை அமைத்துப் பேசுவது; ஆகியவற்றையெல்லாம் சீக்கிரமாகச் செய்வது பெண் குழந்தைகள் தானாம்.

சம வயதுள்ள ஆண்குழந்தைகள், பெண்குழந்தைகள் இவர்களை வைத்துச் சோதனைகள் சில செய்து பார்த்திருக்கிறார்கள். ஒரே கேள்வியைப் பலவிதமாகக் கேட்பது...ஒரே செய்தியை வேறு வேறு கோணங்களிலே இருந்து விளங்குவது...தவறு இல்லாமல் பேசுவது...வேகமாகப் படிப்பது...எழுதுவது...புரிந்து கொள்வது...இப்படி எத்தனையோ சோதனைகள் இவற்றில் எல்லாம் ஆண் குழந்தைகளை விடப் பெண் குழந்தைகள் ஒன்றரை மடங்கு அதிகத் திறமை உள்ளவர்களாக இருக்கிறார்கள், இன்னொரு மொழியைக் கற்றுக்கொள்வது... பேசுவது, எழுதுவது என்பனவும் பெண்ளுக்குச் சுலபமாக வருகிறது.

இரண்டு மொழிகளை மாற்றி மாற்றிப் பேசுவது, மொழி பெயர்ப்பது இவைகளிலும் பெண்களுக்குத்தான் அதிகத் திறன். சரி, இதை விடுங்கள். புள்ளி வைத்துக் கோலம் போடுவது முதல், கைக்கடிகாரங்களிலேயும், கம்பியூட்டர்களிலேயும் நுண்ணிய பாகங்களைப் பொருத்துவது வரை-பெண்கள் திறமையாகச் செயல்படுகிறார்கள்.

நுட்பம், துல்லியம், விரைவு, சிறுகை இலக்கங்களோடு செய்யவேண்டிய மென்மையான பணிகள் ஆகியவற்றிற்கெல்லாம் தேவைவனக் குவியம்-பொறுமை. இவை பெண்களிடம் தான் இருக்கின்றன. அமெரிக்காவில் இன்னொரு சோதனை கூட செய்து பார்த்திருக்கிறார்கள். பெண்களின் மூக்கு-மோப்ப உணர்வு இவையெல்லாம் எப்படி என்று பார்த்திருக்கிறார்கள். பெண்கள் அதிக எண்ணிக்கையில் வாசனைகளைப் பிரித்துக் கண்டுபிடித்து விடுகிறார்களாம்.

ஆண்களால் அந்த அளவுக்கு முடியவில்லையாம். சரி, காது எப்படி? செவிப் புலன் உணர்வும் பெண்களுக்குத்தான் அதிகமாம்.

ஒரு கும்பல்... அதில் பலவிதமான சத்தம். அதற்கு இடையில் குரலின் தொனி, ஏற்ற இறக்கம். இவற்றை வைத்தே பேசுகிற ஆளைக் கண்டுபிடித்து விடுகிறார்களாம். ஒரு கூட்டத்தில் தன்னுடைய வீட்டுக்காரர்எங்கே இருக்கிறார், பிள்ளைகள் எங்கே இருக்கிறார்கள் என்பதையெல்லாம் பெண்கள் சீக்கிரமாகக் கண்டுபிடித்து விடுகிறார்களாம். இன்னொரு விஷயம், ஒரு பொருளைப் பார்த்தவுடன் அது என்று அடையாளம் கண்டு கொள்வது, அதை மனதிலே பதியவைத்துக் கொள்வது... அப்புறமாக இன்னொரு சந்தர்ப்பத்தில் அது எங்கேயிருந்தது என்று சரியாக ஞாபகப்படுத்திக் கொள்வது இது மாதிரிச் சோதனைகளில்எல்லாம் பெண்கள்தாம் முன்னணியில் இருக்கிறார்கள். ஒரு சராசரி சூழ்நிலையில்... ஆண்களைவிட அதிகமான எண்ணிக்கையிலே புன்னகைபுரிவது-சிரிப்பது பெண்கள் தாம்! அதிகமான தோழமை உணர்வோடு பேசுவதும் அவர்கள்தாம்.

இரண்டுபெண்கள் பேசிக்கொண்டிருப்பதையும், பாருங்கள். அதேமாதிரி இரண்டு ஆண்கள் பேசிக்கொண்டிருப்பதையும் பாருங்கள்: ஆண்கள் ஓர் அடிதள்ளியே நின்று பேசிக்கொண்டிருப்பார்கள். மருத்துவர்களை எடுத்துக் கொள்ளுங்கள் சிரித்த முகத்தோடு நோயாளிகளிடம் பரிவோடு பேசுவதில் பெண் டாக்டர்கள் தாம் அதிகம். இதுவரை சொல்லப்பட்டவை எல்லாமே அறிவியல் பூர்வமான செய்திகள்.

ஆராய்ச்சியாளர்கள் கூறியிருக்கிறஉண்மைகள் அனுபவத்திலும் நாம் பார்த்துக் கொண்டுதானே இருக்கிறோம். எனவே இளம்பெண்கள் வாழ்வில் சோர்வடையத் தேவையில்லை. 'இயற்கையே நமக்குச் சாதகமாக இருக்கிறது எல்லாம் நம்மால் முடியும்!' என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும். பள்ளிக்கூடங்களிலும்சரி, வீடுகளிலும்சரி... நாம் சாதாரணமாகப் பார்த்துக்கொண்டுதானிருக்கிறோம். பெண் பிள்ளைகள் புரிந்துகொள்கிற அளவுக்கு ஆண்பிள்ளைகள் எதையும் புத்திசாலித்தனமாகப் புரிந்துகொள்வதில்லை.

ஒரு பையன் தன் அப்பா-அம்மா திருமண ஆல்பத்தைப் புரட்டிக்கொண்டேயிருந்தான். பிறகு தன்தாயிடம் 'அம்மா! இதுயார் இந்தப் படத்தில் அழகாக மீசைவைத்துக்கொண்டு சிரித்தபடி நிற்பது?' என்று கேட்டான். 'அதுதானடா உங்களுடைய அப்பா' என்றாள் அந்த அம்மா. 'அப்படியென்றால்.. இப்போது நமதுவீட்டில் நரைத்த தலையோடு அழுது வழிந்துகொண்டிருக்கிறாரே ஒருவர். அவர்யார்? என்றான் பையன்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# நோர்வே தூதுக்குழு அம்பாந்தோட்டை விஜயம்

இலங்கை வந்துள்ள நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் தலைமையிலான குழு நேற்று அம்பாந்தோட்டைக்குவிஜயம் செய்துள்ளது தென்பகுதி அபிவிருத்தி தொடர்பாக ஆராய்வதற்காக இக்குழுவினர் அங்கு விஜயம் செய்துள்ளதாக நோர்வே தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்த தூதுக்குழுவினர் அம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தில், அம் மாவட்ட அரச அதிபரை சந்தித்து கலந்துரையாடியுள்ளது, (ச08)

# தமிழீழ விடுதலைப் போராட்டம் மானுட விடுதலைப் போராட்டமே

### புலிகளின் மகளிர் பிரிவு அரசியல் பொறுப்பாளர் தெரிவிப்பு

(நமது நிருபர் ரி.ரி மயூரன்)

தமிழீழ விடுதலைப்போராட்டம் ஒட்டுமொத்தமான மானுட விடுதலைப்போராட்டமாக இருக்கிறது. இத்தகைய போராட்டத்தின் வடு எமது எதிர்காலச் சந்ததிக்கு எத்தகைய எச்சங்களை விட்டுச் செல்லப்போகிறது என்பது பற்றி ஆராய்வதாகவே இம் மானுடத்தின் தமிழ்க் கூடல் மாநாடு அமைகிறது.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் மகளிர் பிரிவு அரசியல் பிரமுகர் செல்வி தமிழினி தெரிவித்தார்.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற பேராளர் மாநாட்டில் கலந்து கொண்டு நிறைவுரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில்,

விடுதலைப் போராட்டத்தில் நாம் கொடுத்த விலைகள் நாம் இழந்த இழப்புக்கள் எல்லாம் வெறும் சம்பவங்களாக இருந்து விடக் கூடாது.

எனவே இங்கு கூடியுள்ள அனைவரும் இந்த வரலாற்று நிகழ்வுகளை எவ்வாறு பதிவாக்கப் போகின்றனர் என்பதை இந்த மாநாடு சொல்லும் என்பதில் ஐயமில்லை.

எமது தமிழ் இனம் தமது உரிமையைப் பெறப்போராடி தனது முகவரியை உலக அரங்கில் எழுதக் கூடியவாறு இப்போது நிமிர்ந்து நிற்கிறது.

எனவே இந்தப் போராட்டத்தை பதிவு செய்ய வேண்டிய பொறுப்பு நம் அனைவருக்கும் உரியது என்றார்.

(க-இ)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் 2 ஆம் வகுப்புக்கு நியமித்த, 2 ஆம் வகுப்பின் II ஆம் தரத்திற்கு நியமித்தல் அல்லது உயர்த்தல் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்கள் நவம்பர் மாதம் 11 ஆம் திகதிக்கு முன்பாக செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழு, இசுறுபாய, பெலவத்தை, பத்தரமுல்லை என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

(க-3)

# போலியோ சொட்டு மருந்து

(சுனுமலை)

வடக்கு-கிழக்கு மாகாணப் பகுதிகளில் எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7.00 மணிமுதல் இரண்டாம் சுற்று போலியோ தடுப்பு மருந்து ஐந்து வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு வழங்கப்படவுள்ளது.

கடந்தமாதம் 28 ஆம் திகதி முதல்சுற்று போலியோ சொட்டு மருந்து வழங்கிய அதே நிலையங்களில் இம்முறையும் வழங்கப்படவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள ஏழு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் 189 தடுப்பு மருந்து வழங்கும் நிலையங்களிலும் இச் சொட்டு மருந்து வழங்கப்படவுள்ளது.

சகல சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிற்கும் தடுப்பு மருந்து மற்றும் ஆவணங்கள் வந்து சேர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (க-252)

# பக்தர்கள் மீது தாக்குதல்

நல்லூர்கந்தசுவாமி ஆலயத்திற்கு வழிபாட்டிற்கு சென்ற பக்தர்கள் மீது நபர் ஒருவர் தாக்குதல் நடத்திய சம்பவம் கடந்த வியாழக்கிழமை அதிகாலை 4.00 மணியளவில் இடம் பெற்றது.

சம்பந்தப்பட்ட நபர் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

பிரஸ்தாபநபர்மனநோயால் பாதிக்கப்பட்டிருக்கலாம் என பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

### ஹெரோயின் விற்க முயன்றவர்

# பொலிஸாரால் கைது

## வெலிகமவில் சம்பவம்

(கொழும்பு)

சிவில் உடையில் இருந்த இரு பொலிஸ் கான்ஸ்டபிள்களுக்கு ஹெரோயின் போதைப் பொருள் விற்பனை செய்ய முயன்ற நபர் ஒருவரை வெலிகம பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதான நபர் நகரில் பல்வேறு இடங்களில் போதைப் பொருள் விற்பனை செய்து வருவதாக கிடைத்த தகவலொன்றைத் தொடர்ந்து பொலிஸார் சிவில் உடையில் சென்று பிரஸ்தாப நபரைக் கைது செய்துள்ளனர்.

இந் நபரிடமிருந்து பொலிஸார் 3ஆயிரம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருளையும் கைப்பற்றியுள்ளனர்.

(க-03)

# திருமலை படுகொலைகள்

## நடவடிக்கைஎதுவும்இல்லை

### ரெலோ தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

திருகோணமலை பகுதியில் அண்மையில் இடம் பெற்ற படுகொலைசம்பவம் தொடர்பாக எந்த சட்ட நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை எனரெலோ இயக்க தலைவர் ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார்.

இக் கொலை சம்பவங்களில் இலங்கை பொலிஸார் பலர் ஈடுபட்டிருப்பதால் சட்ட நடவடிக்கைகள் மேற் கொள்வதில் அரசு தரப்பு தயக்கம் காட்டுவதாக பொது மக்கள் தரப்பில் தெரிவிக்கப்டுகிறது.

தாக்குதல் நடத்தியவர்ளை தம்மால் அடையாளம்காட்ட முடியும் என காயம் அடைந்தவர்கள் பல தடவைகள் தெரிவித்துஇருந்தபோதும்இலங்கை பொலிஸார் இது தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்க வில்லை.

சந்தேக நபர்களை கைது செய்யவோ காயம் அடைந்தவர்களிடம் இருந்து வாக்கு மூலத்தை பெற்றுக் கொள்ளவோ இலங்கை பொலிஸார் நடடிக்கைஎடுக்காததுகுறித்து திருகோணமலை மக்கள் கடும் அதிருப்தி அடைந்துள்ளார்கள்.

இது தொடர்பாக பலதரப்பினராலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிற்கு கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்டம்திருக்கோவில் காஞ்சிரம் குடாப் பகுதியில் விசேட அதிரடிப் படையினரால் அப்பாவிப் பொதுமக்கள் ஏழு பேர் சுட்டுக் கொல்லப்பட்டமையைக் கண்டித்து திருகோணமலையில்வீதிமறியல் போராட்டம் நடாத்தியவர்கள்படு கொலை செய்யப்பட்டமை ஏற்கனவே தெரிந்ததே. (க-07)

# ஒட்டோ மோதியதில்

## இளைஞர் படுகாயம்

(சுண்டுக்குளி)

ஈச்சமோட்டை பீச்றோட் பகுதிகளில் ஆட்டோ ஒன்று மோதியதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை தனது வீட்டிற்கு முன்னால் நண்பர் ஒருவருடன்கதைத்துக் கொண்டிருந்தவேளை மிகவும் வேகமாகவந்த ஆட்டோ மோதியதாலேயே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவத்தின் போது எஸ். அரவிந்தன் என்ற இளைஞனே படுகாயமடைந்தவராவார்.

வீதியின் ஓரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த புத்தம் புதிய லுமாலா சைக்கிள் ஒன்றும் இச்சம்பவத்தின் போது பலத்த சேதத்திற்கு உள்ளாகியுள்ளது. (க-110)

# அக்கரைப்பற்றில் கடத்தப்பட்ட இளைஞன்

## விளக்கமறியலில்

(கொழும்பு)

அக்கரைப்பறறில் கடத்தப்பட்ட முஸ்லிம் இளைஞனும் அதுதொடர்பாக பொலிஸில் முறைப்பாடுசெய்த நபரையும் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை விளக்கமறியலில்வைக்குமாறு அக்கரைப்பற்று மேலதி [illegible] நீதிவான் நேற்று முன் தினம் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை இவ்இளைஞன் கடத்தப்பட்ட சம்பவத்தை அடிப்படையாக வைத்து நடத்தப்பட்ட ஹர்த்தால் சம்பவம்தொடர்பான விசாரணைகளை இரகசியப் பொலிஸார் தொடர்ந்துமேற் கொண்டுவருவதாகஅக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (8)

## யுனெற்றா மீது தடைநீக்கம் யுத்த முடிவின் எதிரொலி

(லுவாண்டா)

அங்கோலாவில் கடந்த 25 வருடகால உள்நாட்டு யுத்தம் முடிவடைந்து என்பதைத் தொடர்ந்து யுனெற்றா கிளர்ச்சிவாத அமைப்பின் மீதான தடைகளை நீக்குவதற்கு ஆதரவு ஐக்கிய நாட்டுப் பாதுகாப்புப் பேரவை வாக்களித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப்பேரவையில் அங்கத்துவ நாடாக எதிர்வரும் ஜனவரியில் அங்கோலா இணையவுள்ள நிலையிலேயே யுனெற்றா அமைப்புகள் மீதான தடைகள் தளர்த்தப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சு- 02)

## ஈக்குவடோரில் தேர்தல்; 11 பேர் போட்டியிடுவர்

(க்விடோ)

ஈக்குவடோரில் இன்று நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் 11 பேர் போட்டியிடவுள்ளனர்.

ஜனாதிபதியாகத் தெரிவு செய்வதற்கு 40 அல்லது 50 வீத வாக்குகளைப் பெற வேண்டியுள்ளதுடன், ஏனைய போட்டியாளரை விட 10 வீத வாக்கு இடைவெளியும் காணப்பட வேண்டும் என்பது ஈக்குவடோரின் தேர்தல் விதியாகும்.

மேலும், இந்தியவம்சாவளியானரின் ஆதரவைப் பெற்ற கட்சிகள் நடத்திய போராட்டத்தையடுத்தே, ஜனாதிபதி கஸ்ரோலா நபூபா புதிய தேர்தலை நடத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (சு-2)

## மாவோ கிளர்ச்சியாளருடன் ஜனாதிபதி உடன்படிக்கை

(போகோடா)

கொலம்பியாவில் மாவோ கிளர்ச்சிவாதிகள் கடத்தப்பட்டிருப்பதால், முன்னர் பிடித்துச்சிறையில்வைத்திருப்பவர்களை விடுவிப்பது தொடர்பாக, கிளர்ச்சி வாதிகளுடன் மனிதாபிமான உடன்படிக்கையொன்றைச் செய்து கொள்ளவிருப்பதாக கொலம்பிய ஜனாதிபதி அல்பிரே யூறிற் தெரிவித்துள்ளார்.

வன்முறைகளைத் தோற்கடிக்க மனிதாபிமானரீதியான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டிய சூழ்நிலையில் தனது கொள்கைக்குப் புறம்பாக இவ்வாறு நடந்துகொள்ளத்தீர்மானித்ததாக தெரிவித்துள்ளார்.

மனிதாபிமான ரீதியிலான நடவடிக்கையின்போது கடத்தப்பட்டவர்களிற்குப் பதிலாக சிறையிலுள்ள கிளர்ச்சி வாதிகளை விடுவிக்க வேண்டிய நிலை ஏற்படலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஜனாதிபதி அல்பிரேயூரிற்றின் தந்தை 20 ஆண்டுகளிற்கு முன்னர் கிளர்ச்சி வாதிகளால் கொல்லப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (சு-2)

## இந்தோனேஷியாவில் அமெரிக்க நிலைகள் மீது தாக்குதல் நடாத்த திட்டம்

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவில்உள்ள அமெரிக்க நிலைகள் மீதுதாக்குதல் இடம்பெறும்சாத்தியம் இருப்பதால், அமெரிக்கப்பிரஜைகள் அங்கு செல்வதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்தோனேஷியாவிலுள்ள அமெரிக்க அரச அதிகாரிகள் மற்றும் நிலைகள் மீது இலக்கு வைத்து தாக்குதல் நடத்தத் தீவிரவாதிகள் திட்டமிட்டு வருவதாகத்தகவல்கள் கிடைத்துள்ளன என்றுஇந்தோனேஷியத் தலைநகரான ஜகார்த்தாவிலுள்ள அமெரிக்கத்தூதரகம் தெரிவித்துள்ளதாகஇராஜாங்கத் திணைக்களத்தின் அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு-02)

## ஆட்சி அமைப்பதில் ஜம்முவில் சிக்கல் நிலை

(புதுடில்லி)

ஜம்மு-காஸ்மீரில் ஆட்சி அமைப்பதற்கு இன்று வரை அம்மாநில ஆளுநர் கால அவகாசம் வழங்கியுள்ளார்.

அண்மையில் நடைபெற்ற தேர்தலில் எந்தக் கட்சியும் பெரும்பான்மை வெற்றி பெற்றிராத நிலையில், ஆட்சியமைப்பதில் சிக்கல் நிலை தோன்றியுள்ளது.

அதிக வாக்குகளைப் பெற்ற காங்கிரஸ், மற்றும் மக்கள் ஜனநாயகக்கட்சி ஆகியவற்றில் யாரை முதலவராகத் தெரிவு செய்வது என்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

ஜம்மு-காஷ்மீர் சட்டமன்றத்தின் ஆயுட் காலம் நேற்றைய தினத்தோடு முடிவடைந்து விட்டதால், புதிய சட்டமன்றம் அமைக்க வேண்டிய சூழ்நிலை ஆளுநரிற்கு ஏற்பட்டுள்ளது.

இந் நிலையில், இடைக் காலப் பிரதமராகப் பதவி வகிக்குமாறு, முன்னாள் முதல்வரும், தேசிய மாநாட்டுக் கட்சியின் தலைவருமான பாரூக் அப்துல்லாவிடம் ஆளுநர் விடுத்த வேண்டுகோளை அவர் நிராகரித்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (சு-2)

## அதிசயப் பறவை அலாஸ்காவில்கண்டுபிடிப்பு

(நியூயோர்க்)

சிறிய விமானமொன்றின் அளவு அதிசய பறவையொன்று அண்மையில் அலாஸ்காவில் காணப்பட்டுள்ளது. அலாஸ்காவின் கிராமவாசிகள் இதனை கண்டதாகவும் இதன் ஒரு இறக்கையின் நீளம் $4\frac{1}{2}$ மீற்றர்களெனவும் அலாஸ்காவின் 'டெயிலி நியூஸ்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

கிராமவாசிகள் அதனை ஜுராசிக்பார்க்கில் வரும் விலங்குளென்று விபரித்தனர்.

முதலில் இதனைஒரு சிறு விமானம்என்று கண்டமக்கள் பின்னரே இதுஒரு பறவைஎன கண்டனராம் நூறாயிரம்வருடங்களுக்குமுன் இப்படியான பறவைகள் இருந்திருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

# ஈராக்கின் விவகாரம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையில் விவாதம்

(வாஷிங்டன்)

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையில் அங்கம்வகிக்காத நாடுகள் ஈராக்விவகாரம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையில் விவாதித்து வருகின்றன இச்சிறப்பு விவாதம்அணிசேரா நாடுகளின் பேச்சாளரும் தென்னாபிரிக்க தூதரும் முன்வைத்தவேண்டுகோளிற்கு இணங்க ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் இவ்விவாதம் பாதுகாப்புச் சபையை கட்டுப்படுத்தாதுஎனவும் இக்கூட்டத்தில் வெளிப்படுத்தப்படும் கருத்துக்கள் ஈராக் விடயம்தொடர்பான சர்வதேசப் பொறுப்புக்களை மேலும் பிளவுபடுத்தும் எனவும் அரசியல்அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே மேற்குலக நாடுகள் பயங்கரவாதம் தொடர்பான பாரபட்சமானமுறையை கடைப்பிடிப்பதாக அரபு நாடுகளின் கூட்டமைப்பு கருத்து வெளியிட்டுள்ளது.

பாரியக்அழிவினை ஏற்படுத்தும் ஆயுதங்களை ஈராக் தன் வசம்வைத்திருப்பதாக இம் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இதனிடையே ஈராக்பிரச்சினை தொடர்பாக ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையிலும் அச்சபையின் நிரந்தர உறுப்பினர்கள் மத்தியிலும் கருத்து வேறுபாடுகளும் தொடர்ந்தும் நீடித்துவருகின்றன.

இதேவேளை ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையில் அமெரிக்கா முன்வைக்கும் தீர்மானத்தைதாம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று ரஷ்யா அறிவித்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதனிடையேஈராக்தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை விரைவில் முடிவு எடுக்கவேண்டும் என்று அச்சபையின் செயலாளர் கோபி அனான் கருத்து வெளியிட்டுள்ளார். (சு-02)

## காஷ்மீரில் குண்டுத் தாக்கு 15 பேர் படுகாயம்

(காஷ்மீர்)

இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தில் தீவிரவாத சந்தேக நபர்கள் குண்டு ஒன்றை வெடிக்க வைத்ததில் பொலிஸார் ஒருவர் கொல்லப்பட்டதுடன், 15 பேர் காயமடைந்துள்ளதாக இந்திய பரா இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

காஷ்மீர் மாநிலத்தில் குளிர் காலத் தலைநகரான ஸ்ரீ நகரிற்கு வடக்கே 30 மைல் தூரத்திலுள்ள சோக்கோ நகரில் இடம்பெற்ற இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் பொலிஸார் ஒருவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதாகவும், காயமுற்றவர்களின் 6 பேர் எல்லைக் காவல் படையினர் என்றும், காயமுற்ற எல்லைக் காவல் படையில் 4 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்திற்கு இதுவரை எந்த இயக்கமும் உரிமை கோரவில்லை.

இதேவேளை, மாநிலத்தின் யுத்த நிறுத்த கோட்டிற்கு அப்பாலுள்ள இந்தியப் படையினர் நேற்று முன்தினம் இரவு மேற்கொண்ட ஷெல் தாக்குதல் காரணமாக 20 பேர் கொல்லப்பட்டதுடன், 8 பேர் காயமுற்றதாக பாகிஸ்தானிய இராணுவம் தெரிவித்துள்ளது. (உ-2)

## இராசி பலன்

21-10-2002
(ஐப்பசி 4 திங்கள்)
பூரணை பி.ப. 1.21வரை
ரேவதி காலை 6.21 வரை
இராகு காலம்-7 32-9 02
நல்ல நேரம்-12.02-1.32

**மேடம்**
ஜனவசியம், காரியஜெயம் நல்ல முயற்சி, புதிய பொருள் சேர்கை

**இடபம்**
பிரயாணக் கஷ்டம், நித்திரைக் குறைவு, உறவினர் சந்திப்பு, சுப செலவு

**மிதுனம்**
தடைப்பட்ட காரியம் கைகூடும், செய் தொழிலால் லாபம் அதிகரிக்கும், குடும்பத்தில் மகிழ்ச்சி, கீர்த்தி

**கடகம்**
தொழில்முன்னேற்றம், அதிகாரிகள் சந்திப்பு, சகோதரர் உதவி, முயற்சி கைகூடும்

**சிங்கம்**
வயிற்றில் கோளாறு, பெரியோர் உதவி, புதிய திட்டமிடல், மனச்சஞ்சலம்

**கன்னி**
வீண் தொல்லை, காரியத் தடங்கல் பிரயாண பயம், உடல்வியாதி.

**துலாம்**
சுவாரஸ்யம், நண்பர்கள் சந்திப்பு, எடுத்த காரியம், கைகூடும், உஷ்ண நிலை.

**விருச்சிகம்**
உறவினர்சந்திப்பு, தொழில் முயற்சிவிருத்தி, உடல் நலம் காரிய சித்தி

**தனுசு**
வியாபாரத்தால் நன்மை, தாழ்ந்தசுபாவம், உடல் நலக் குறைவு, காரிய இடையூறு

**மகரம்**
மாணவர் கல்வியில் ஆர்வம் மனச்சஞ்சலம், காரிய தாமதம், திடீர் நன்மை

**கும்பம்**
நினைத்த காரியம் கைகூடும், இனியசம்பவம், பெரியோர்சந்திப்பு, கூட்டுமுயற்சி,

**மீனம்**
வியாபாரநன்மை, தொழில் கஷ்டம், முயற்சி தாமதம் கௌரவக்குறைவு

(பழைய நேரப்படிகணிப்பிடப்பட்டது)

வளவன்

## இஸ்ரேல் பிரதமர் நாடு திரும்பினார்

(ஜெருசலேம்)

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்டபிள்யு புஷ்ஷுடன் பேச்சு வார்த்தை நடத்தச் சென்ற இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோன் அவசரமாக நேற்று முன்தினம் நாடு திரும்பியுள்ளார்.

இஸ்ரேலிற்கும், பலஸ்தீனத்திற்கும் இடையிலான பதற்ற நிலை அதிகரித்ததையடுத்தே, அவர் அவசரமாக நாடுதிரும்பியுள்ளார்.

எகிப்து எல்லைக்கு அருகில் பலஸ்தீன முகாம் அமைந்துள்ள கிராமப் பகுதி மீது இஸ்ரேல் ஏவுகணைத்தாக்குதலை மேற்கொண்டதையடுத்தே, இருநாடுகளிற்கும் இடையிலான பதற்ற நிலை அதிகரித்துள்ளது

இத் தாக்குல் சம்பவத்தில் 6 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இச்சம்பவத்தை அடுத்து இரு நாடுகளிற்கும் இடையில் அடுத்த வாரம் இடம்பெற இருந்த சமாதானப் பேச்சு வார்த்தைகளிற்கு பாதிப்பு ஏற்படுமென அச்சம் தெரிவிக்கப்படுகின்றது. (சு-2)

## அயர்லாந்தில் இன்று சர்வஜன வாக்கெடுப்பு

(இலண்டன்)

ஐரோப்பிய ஒன்றியத்தின் கிழக்குப் பகுதியை விஸ்தரிக்கும் திட்டத்திற்கு ஆதரவு வழங்குவதா, இல்லையாஎன்பது தொடர்பாக அயர்லாந்தில் இன்று சர்வஜன வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் தற்போதுள்ள 15 அங்கத்துவ நாடுகளுடன் ஒன்றியத்தின் கிழக்குப் பகுதியில் உள்ள 10 நாடுகளை மேலதிகமாகச் சேர்த்துக்கொள்வது தொடர்பாகவேஇந்த சர்வஜன வாக்கெடுப்புஇடம் பெறுகின்றது.

ஐரோப்பிய ஒன்றியத்திலுள்ள 15 நாடுகளில் கிழக்கு விஸ்தரிப்புத் தொடர்பாக அயர்லாந்து மட்டுமே சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி விஸ்தரிப்புப் பிரேரணையை அங்கீகரிக்க வேண்டும்.

அத்துடன், இந்த வருட இறுதிக்குள் ஒன்றியத்தில் 15 நாடுகளும் ஒன்று சேர்ந்து பிரேரணையை அங்கீகரிக்க வேண்டும்; அவ்வாறு அங்கீகரிக்கப்பட்டால் ஒன்றியத்தில் சேர்ந்து கொள்ள கிழக்கு ஐரோப்பியாவின்10 முன்னாள் கம்யூனிஸ்ட் நாடுகள் காத்திருக்கின்றன எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு-02)

### பாடசாலைகளின் புனரமைப்புக்கு

## ஐரோப்பிய ஒன்றியம் 19 கோடி நிதியுதவி

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் 132 பாடசாலைகளை புனர்நிர்மாணம் செய்வதற்கு ஐரோப்பிய ஒன்றியம் 19 கோடி 8 இலட்சம் ரூபாவை வழங்க முன்வந்துள்ளது.

புனர்வாழ்வு, புனர் நிர்மாண அகதிகள் மீள் குடியமர்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா விடுத்த வேண்டுகோளுக்கிணங்க ஐரோப்பிய ஒன்றியம் நிதியுதவியை வழங்க முன்வந்துள்ளது.

இதற்கமைய இந்நிதிமூலம் பாதிக்கப்பட்ட பாடசாலைகள் 18 மாத காலத்துக்குள் புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளன.

தற்போது ஏற்பட்டிருக்கும் சுமுகமான சூழ்நிலையை தொடர்ந்து பல நிறுவனங்கள் பல் வேறுபட்ட உதவிகளை வழங்க முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கன. (க-8)

# விடாமுயற்சியின் பயன் பெறப்படுகின்றதாயினும் விதியை மதியால் வெல்லலாமென்பதற்கில்லை

விதி,ஊழ், தலையெழுத்து என்பன ஒரு பொருட் சொற்கள். அவ்வாறே மதி, புத்தி, அறிவு என்பனவும் ஒரு பொருட் சொற்கள். இன்றைய எமது சமுதாயம் விஞ்ஞான அறிவு மேலீட்டால் விதியை நம்பும் நிலை இல்லை. ஆயின் பழந்தமிழ் நூல்களும் சைவசாத்திரங்களும் விதியை விளம்பி நிற்கின்றன. பழந்தமிழ்க காப்பியங்களுள் ஒன்றாகிய சிலப்பதிகாரத்தில் கருப் பொருளாகக் கொண்டவற்றுள் ''ஊழ்வினை உருத்து வந்தூட்டும் '' என்பது கையாளப்பட்டுள்ளது. யோகர் சுவாமிகளின் வாக்குகளில் ஒன்றாகிய ''எப்பவோ முடிந்த காரியம்'' என்பது விதியைக் குறிப்பிடுவதே.''தாரமும் குருவும் தலைவிதி'' என்னும் முதுமொழியும் விதியை வலியுறுத்துவதே எமது வாழ்வு விதி வழியே செல்லும் ஆற்றோட்டம் போன்றதே. மனித வாழ்வில் பிரமச்சரிய நிலையும் கிருகஸ்த நிலையும் பெரும்பாலும் அமையும். பிரமச்சரிய நிலையில் நல்லறிவுநிறைந்த குரு வாய்க்கப் பெற்றால் நல்லொழுக்கமும

ம.கந்தையா

நல்லறிவும் பெற வாய்ப்புண்டு. நற்குண நற்செய்கைகளும் தற்காத்து தாற் கொண்டாற் பேணித் தகைசான்ற சொற்காக்கும் மனைவி வாய்க்கப் பெற்றால் இல்லறத்தை நல்லறமாக நடத்தி ஈடேற இயலும்.

### பல பிறவிகள்

மணிவாசகப் பெருமான் சிவபுராணத்தில் ''புல்லாகிப் பூடாகிப புழுவாய் எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்'' எனப்பல பிறவிகள் உண்மையைக் குறிப்பிட்டுள்ளார். ஆன்மாக்கள் பல பிறப்புக்கள் எடுத்து இறந்தும் பிறந்தும் பிறவிக்கடலில் தத்தளிக்கின்றன. ''புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என் மனத்தே வழுவாதிருக்க வரந்தர வேண்டும்'' என அப்பர் பெருமான் வேண்டுகிறார். மனிதப் பிறவி பெற்ற ஆன்மா சில சமயம புழுவாய்ப் பிறக்கவும் நேரிடலாம் என்பதை அது காட்டுகிற தல்லவா? விதிக்குக் காரணமாய் இருப்பது ஆன்மாக்கள் செய்யும் வினைகளே. மனிதனைப் பொறுத்தவரையில் ஆறறிவு பெற்ற உயிராதலின் நல்வினை தீவினைகளைச் செய்யும் நிலை உணரக்கூடியதாய் உள்ளது. ஆயின் மற்றைய ஒன்று முதல் ஐந்து வரையான உயிர்கள் வினை செய்தலும் அவ்வாற்றல் மேல் கீழ்ப் பிறவிகள் பெறுதலும் எவ்வாறு என்பது புலப்படுமாறில்லை.

நமது ஆன்றோர் விதி என்பது ஒன்றுண்டு என்பதைத் தமது சிந்தனாசக்தியாலேயே உணர்ந்தனர். மனித சமுதாயத்தில் சிலர் செல்வராகவும் வேறு சிலர் உண்ண உணவும் உடுக்க உடையும் இல்லாதவராய் இருந்து வாழ வேண்டியவராகவும் இருப்பதை உற்று நோக்கினர். செல்வம் பெற்றவன் இன்பமும் மகிழ்ச்சியுமுடையவனாய் வாழ, அது பெறாதவன் துன்பத்தில் துடிப்பதைக் காண்கிறோம். சிலர் முடமாய், குருடாய், செவிடாய், ஊமையாய்ப் பிறப்பதையும், வேறு சிலர் எவ்வித அங்கக் குறைபாடு மின்றிப் பிறப்பதையும் காண்கின்றோம். சிலர் தீராத நோய் வாய்ப்பட்டு வருந்துவதையும் மற்றும் சிலர் நோய் நொடி அதிகமில்லாமலிருப்பதையும் காண்கின்றோம். அவ் வேறுபாடுகளுக்குக் காரணம் யாது என்னும் சிந்தனையின் விளைவாகவே விதி என்பது ஒன்றுண்டு என உணர்ந்தனர். .

### முன் செய்தவினை

பட்டினத்தடிகள் கழுவிலேற்றப்பட இருந்த நிலையில் ''என் செயலாவது... இந்த ஊன்... பிறப்பதற்கு முன் செய்த தீவினையோ இவ்வனே வந்து மூண்டதுவே'' எனப்பாடியிருப்பது. முற்பிறப்பிற் செய்த வினைப் பயனையும் இப்பிறப்பில் அனுபவிக்க நேரிடும் என்பதைக் காட்டுகின்றதன்றோ? நாம் செய்யும் நல்வினை தீவினைகள் பொன் விலங்கும், இரும்பு விலங்கும் போன்று பிறவிக்கட்டுள் சேர்க்கும் என்பது பரிமேலழகர் கருத்து.

**''அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை பொறுத்தானோடூர்ந் தான் இடை''**

என்னும் குறட்பா .''முற்பிறப்பில் அறஞ்செய்த ஒருவனை அறஞ் செய்யாதவன் சுமக்க நேரிடும் என்பதை உணர்த்துகிறது. இது வினையின் விளைவே. ஆறறிவும் முக்குணங்களும் கொண்ட மனிதன் ஒவ்வொரு கணமும் வினை செய்து கொண்டேயிருக்கிறான். மனம்,மொழி, மெய் யாகிய கருவிகளால் வினை நிகழ்ந்து கொண்டேயிருக்கிறது. மனம் தீய சிந்தனைகளைச் சிந்தித்துத் தீவினையையும், நற்சிந்தனைகளைச் சிந்தித்து நல்வினைகளையும் ஆற்றுகின்றது. எண்பது கோடி நினைந் தெண்ணி நல்வினை தீவினைகளைத் தேடுகின்றது. எமது மொழியால் பொய் கூறுதல், புறங் கூறுதல், கோள் சொலலுதல், வன்சொற் கூறுதல் என்னும் தீவினைகளும் இன் சொல் கூறுவதால் நல்வினையும் உண்டாகும். கை,கால்,முதலிய உறுப்புகளால் அடித்தல், உதைத்தல், வெட்டுதல், முதலிய தீவினைகள் செய்யப்படும். கண்ணால் பிறர் மனை நயத்தல் நிகழும் முக்குணங்களுள் சாத்வீக குணம் நல்வினை செய்யத்தூண்டும் மற்றிரு குணங்களும்தீவினை செய்யத் தூண்டும். (அவை இராசத தாமத குணங்கள்).

### பழவினைகள்

சைவசமய சாத்திரங்கள் கூறும மலங்கள் மூன்று அவை ஆணவம்,கன்மம், மாயை என்பன. இவற்றுள் கன்மம், பிராப்தம், ஆகாமியம்,சஞ்சிதம் என மூவகைப் படும். பிராரப்தம் முற்பிறப்புக்களின் ஈட்டிக் கொண்ட வினைகளில்,நிகழும் பிறப்பில் அனுபவிக்க நியமிக்கப்பட்டவை. ஆகாமியம் என்பது இப்பிறப்பில் புதிதாகச் செய்யப்பட்டு வரும் வினை சஞ்சிதம் என்பது அனுபவித்து நிறைவுபெறாத வினைகளின் தொகுப்பு. அது ஒரு மூடை போலுள்ளது. உயிர்கள் இறக்கும் போது உடன் செல்வது இவ வினை மூடையே.

நமது விதியை - இப்பிறப்பில் நாம் வாழும் போது நிகழவிருக்கும் பழவினைக் கீடாகிய நிகழ்ச்சிகளை மூன்கூட்டியே அறிவதற்குச் சோதிடக்கலை பெரிதும் உதவும். ஒரு மனிதன் பூமியில் உதிக்கும் போது அவன் பிறந்த நட்சத்திரமும் அந்நேரத்தில் பன்னிரண்டு இராசிகளிலும் நவக்கிரகங்களும் அமைந்துள்ள நிலையும் வாழ்வில் ஏற்படக்கூடிய நிகழ்ச்சிகளை அறிவதற்கு உதவும். இறைவனே கிரகங்களையும் இயக்கி எம்மையும் வினைவழி இயங்க வைப்பவன். இதனால் நம்மவர் ''சாதகம்'' என்பதைச் சோதிடர்களைக் கொண்டு எழுதுவித்துப் பலன்களை அறிவர். அனுபவவாயிலாகச் சாதகபலன் சரியாக வருவதை அறியலாம். ஆயின் இக்காலம் சோதிட அறிஞர்களும் அருகிவருவது கவலைக் குரியது.

பின்வரும் செய்யுட் பகுதிகள் வினை விளைவையும் விதியையும் காட்டுவன்.

1. **எழுதியவாறே காண் இரங்கும் மடநெஞ்சே.**
2. **நிதியும், கணவனும் நேர்படினும் தத்தம் விதியின் பயனே பயன்.**
3. **ஈட்டும் பொருள் முயற்சி எண்ணிறந்த ஆயினும் ஊழ் கூட்டும் படியன்றிக் கூடாவாம்.**
4. **தாந்தாம் முன் செய்த வினை தாமே அனுபவிப்பார்.**
5. **முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.**
6. **நதியின் பிழையன்று நறும்புனலின்மை..... விதியின் பிழை இதற்கேன் வெகுண்டனை.**

### விதியின் வழியே மதி

இனி விதியும் மதியும் என்பது பற்றிச் சிறிது சிந்திப்போம். விதியை மதியால் வெல்லலாமா? என்பது ஒரு வினா. எமது பழவினைக் கீடாகவே எமது தனு,கரண, புவன போகங்கள் அமைகின்றன. பொறிகளில் மெய்,வாய்,கண்,மூக்கு, செவி, என்னும் புறக்கருவிகளும் மனம்,புத்தி,சித்தம், அகங்காரம் ஆகிய அந்தக் கரணங்களும் அடங்கும். எமது மதி மேற்குறிப்பிட்ட கரணங்கள் வாயிலாகவே வழி நடத்தப்படுகிறது. எனவே விதியின் வழியே மதி தொழிற்படவேண்டியநியதி உண்டு.

**ஞானச்சுடர்**
**ஆடி - 2002**

**''ஊழிற் பெருவலியாவுள மற்றொன்று சூழினுந தான் முநதுறும''**. இது விதியை மதியால் வெல்ல இயலாமையைக் காட்டும் குறட்பாவாகும்.

**''ஊழையும் உடபக்கம் காண்பா உலைவின்றித் தாழஞதுற்றுபவா''**

என்னும் குறட்பா விதியை மதியால் வெல்வதைக் குறிப்பதாகக் கொள்ளலாமோவெனில் அப்படியன்று. இச் செய்யுள் விடாமுயற்சியின் பயனையே குறிப்பதாகும். பரிமேலழகர் மேற்குறிப்பிட்ட செய்யுள்ளுக்கு மார்கண்டேயரை உதாரணமாகக் காட்டி விடாமுயற்சியின் பயனாகக் காட்டியுள்ளார். கடவுள் தியானமும் தொணடுகளும் உடையவராக நாம் வாழ்ந்தால் எமது வினைப்பயனாக அனுபவிக்க வேண்டிய கடுந்துன்பங்கள் கண்ணில் வர வேண்டியது புருவத்துடன் போவது போலக் குறைவுபடும் என்பதை உறுதியாகக் கூறலாம்.

பின்வரும் செய்யுள்கள் சிந்தித்தற் குரியவை.

1. **''சிவாயநமவென்று சிந்தித்திருப்போர்க்கு அபாயம் ஒரு நாளும் இல்லை-உபாயம் இதுவே மதியாகும். அல்லாத எல்லாம் விதியே மதியாய் விடும்.**
2. **வினைப்பயனை வெல்வதற்கு வேதம் முதலாம் அனைத்தாய நூலகத்தும் இல்லை.**

நன்றி


அன்பு வாசகர்களே!

வலம்புரியின் வாரமலர்

# சங்கு நாதம்

ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் வலம்புரி இணைக்கப்படாமல்

தனித்து ரூ.12/= விலையில் பெற்றுக் கொள்ளுங்கள்

தினசரி வெளிவரும் வலம்புரியின் விலையில் மாற்றமில்லை

அறிஞர்களின் மனங்களில் நீங்காத இடம்பிடித்துவிட்ட சங்குநாதத்தை நீங்களும் வாசிக்கத் தவறாதீர்கள். இலங்கை பூராகவும் விற்கப்படும் சங்குநாதம் இனிமேல் உங்கள் உறவுகளுக்காக வெளிநாடுகளுக்கும் அனுப்பப்படுகின்றது.

சங்குநாதம்

வலம்புரியின் இணைப்பின்றி

ரூ. 12/= மட்டுமே.

# 50 ஆயிரம் அரச பணியாளர் வேலை இழக்கும் அபாயம்

## மகிந்த ராஜபக்ஷ எச்சரிக்கை

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியமும் உலக வங்கியும் இலங்கை அரசுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்திற்கு இணங்க 50 ஆயிரம் அரச பணியாளர்கள் வேலையை இழக்கும் ஆபத்து இருப்பதாக எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அவர்பேலுட தெரிவிக்கையில் அரசஊழியரின் தொகையைக் குறைக்குமாறு சர்வதேச நாணய நிதியம் அரசாங்கத்திற்கு வலியுறுத்தி வருகின்றது அதற்கு இணங்கவே இவ் ஆளணிக் குறைப்பை மேற்கொஅள அரசு தயாராகிவருகிறது என்றும் குற்றம் சாட்டியுள்ளார்.

இச்சுற்று நிருபம் திறைசேரியில் இருந்து வரவில்லை. இது நிதி அமைச்சில் இருந்து அனுப்பப்பட்டதாகும். அரச சேவையில் கடமையாற்றுவோரிற்கு ஒய்வூதியம்கொடுப்பதை தவிர்த்து ஒருதொகைப் பணத்தை வழங்கும் திட்டமொன்றையும் அரசு மேற்கொள்ளவிருக்கிறது

இச்சுற்று நிருபம் 3 ஆண்டுகளிற்கு செல்லுபடியாகும் அவ்வாறாயின் வேலைவாய்ப்பினை இழந்து விரக்தியுற்ற இளைஞர்களிற்கு அரசு என்ன பதில் கூறப்போகிறது என்றும்கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுபற்றி இம்மாதம் 2? ம் திகதி அனைத்து தொழிற்சங்கங்களையும் கூட்டி இதுபற்றி நாம் கலந்துரையாடுவோம் அதன் பின் அரசின் செயற்பாடுகளை எதிர்த்து தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்வது பற்றி முடிவெடுப்போம்.

அதேவேளை வேலையற்று இருக்கும் பட்டதாரிகளிற்கும் இன்னும் பல்கலைக்கழகங்களில் இருந்து வெளியேறிக்கொண்டிருக்கும் பட்டதாரிகளிற்கும் அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்பதையும் தாம் கேட்கப்போவதாகவும் தெரிவித்துள்ளார். (உ-1C)

# விஞ்ஞான பொது அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக விவசாயபீட மாணவர் ஒன்றியத்தினால், பீடத்தின் பழைய மாணவர் ஆகிய அமரர்கள் ஜி.கிருபாகரன், ரி.ஜெயக்குமார் ஞாபகார்த்தமாக யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட விஞ்ஞான பொது அறிவுப் போட்டியில் வெற்றியீட்டிய பாடசாலைகள் மற்றும் மாணவர்களின் விபரங்கள் வருமாறு;

**வாய் மொழிப் பரீட்சை**

முதலாம் இடம்-பரு. ஹாட்லிக் கல்லூரி

இரண்டாம் இடம் - யா/ புனித பரியோவான் கல்லூரி.

**எழுத்துப் பரீட்சை**

முதலாம்இடம்; சி.பகீரதன் சி. காண்டீபன் ஹாட்லிக் கல்லூரி

மூன்றாம் இடம்; இ. கீர்த்தனா வடமராட்சி மத்திய மகளிர்கல்லூரி, நா.சிவகரன் புனித பரியோவான் கல்லூரி

ஐந்தாம் இடம்: சி கஜேந்திரன் ஹாட்லிக்கல்லூரி, ச. கர்ணன், வி. தனுசன் புனித பரியோவான் கல்லூரி

எட்டாம்இடம்: ல.கேதார சர்மா இந்துக்கல்லூரி

ஒன்பதாம்இடம்: சி குமரேசன் சரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி

பத்தாம் இடம்: அ: நிஷாந்தன் இந்துக் கல்லூரி (உ)

# கணனி திருத்துநர்களை நியமிக்க கோரிக்கை

(மானிப்பாய்)

யாழ் மாவட்ட உள்ளூராட்சி சபை அலுவலகங்களின் பாவனையில் உள்ள கணனிகள் பழுதடையுமயின் அவற்றினைத் திருத்தம் செய்து சீர் செய்யவும் அவற்றினைப் பராமரித்து பாதுகாக்கவும் கணனியில் தேர்ச்சிபெற்ற உத்தியோகத்தர்களை நியமிக்கும்படி வடக்கு- கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரிடம் பிரதேச சபைகளின் செயலாளர்களினால் கூட்டாகக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது

உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்களுக்கான கலந்துரையாடலொன்று அண்மையில் யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நடை பெற்றது;

இதில் கலந்து கொண்ட பிரதேச சபைகளின் செயலாளர்கள் தமது சபைகளின் அலுவலகப் பாவனையிலுள்ள பழுதடைந்த கணனிகளைத் திருத்துவதற்கும் அவற்றினை உரிய முறையில் பராமரிப்பதற்கும் ஏற்ற உத்தியோகத்தர்கள் இல்லை எனச் சுட்டிக் காட்டினர்; (உ-232)

# ஆசிரியர் மீது வழக்கு மாணவிக்கு அறைந்தாராம்

(கொழும்பு)

கொழும்பில உள்ள பிரபல பாடசாலை ஒன்றிலே கடமையாற்றிய ஆசிரியர் மாணவிக்கு கன்னத்தில் அறைந்தமையினால் அம்மாணவி செவிப்புலன் இழந்துள்ளதாக உச்ச நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட 11 வயதான லஹிரு சங்கல்ல சமரசிங்க என்ற மாணவி தான் தாக்கப்பட்டது தொடர்பாக அதிபர் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் மருத்துவ பரிசோதனை மூலமே தான் செவிப்புலனை இழந்துள்ளமை தெரிய வந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் தனக்கு 1 மில்லியன் நஷ்டஈடு வழங்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

இவ்வழக்கில் அதிபர்கள் உட்பட 6 பேர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது; (க-10)

# "தமிழீழம்" என்பது ஈழத்தின் தமிழ் மாநிலத்தை குறிக்கிறது

## சி. வி.கே. சிவஞானம் உரை

(யாழ்ப்பாணம்)

தமிழ் இனம் அறம் சார்ந்த இனம் ஈழத்தமிழ் மக்களின் போராட்டமும் அறம்சார்ந்ததே. அதற்குமேலாக அது மானுடம் நோக்கியது மனித தத்துவம் சார்ந்ததாகும், ஈழம் என்ற சொல்லை தென்னிலங்கை மக்கள் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. தமிழீழம் என்பது பிரிவினையும் அல்ல தனிநாடும் அல்ல இதைத் தென்னிலங்கை மக்கள் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும்

இவ்வாறு யாழ், மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தலைவர் சி. வி'கே, சிவஞானம் தெரிவித்துள்ளார்,

யாழ்;வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மானுடத்தின் தமிழ்க்கூடல் 2002 எனும் நிகழ்வில் தலைமை தாங்கிப் பேசுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில்

இந்தியா மொழிவாரி மாநிலங்களைக் கொண்ட கூட்டாட்சி நாடாகும், தமிழ் மாநிலம் தமிழ்நாடு என்று அழைக்கப்பட்டாலும் அங்கு நாடு என்ற சொல் தனிநாடு என்று கருதப்படவில்லை தமிழீழம் என்பது இலங்கையில் ஈழத்தின் தமிழ் மாநிலத்தை மொழிரீதியாகக் குறிப்பதாகும்

இதற்காகவே அறத்தின் அடிப்படையில்ஈழப்போராட்டம் மேற்கொள்ளப்பட்டது அது அறத்தின் அடிப்படையில் இல்லாதிருப்பின் விடுதலைப்புலிகள்இயக்கம்பரந்து விரிந்து மரபுவழி இராணுவ கடற்படை, காவல்துறை மற்றும் நிர்வாகக்கூட்டமைப்புகள் கொண்ட ஒன்றாக வளர்ந்திருக்க முடியாது;

சிங்கள முஸ்லிம் மக்களுக்கு எதிரான இயக்கம் என்று தவறாக வர்ணிக்கப்பட்டு வந்த புலிகள் இயக்கம் அது ஒரு தவறான கருத்து என்பதை நிரூபிக்க சிங்கள முஸ்லிம் மக்களை அழைத்து இத் தமிழ்க்கூடலை நடாத்துகின்றது.

ஆனால் எல்லாப்போராட்டங்களையும் பிரிவினைவாத தனிநாட்டு முத்திரைகுத்தி சிறிலங்காவின் தொடர்ச்சியான அரசுகள் நிராகரித்தன இதன் காரணமாக தமிழ்ஈழ இளைஞர்கள் ஆயுதமேந்தும் நிலைக்கும் தனிநாடு கோரும் நிலைக்கும் தள்ளப்பட்டனர் என்றார். (இ-77)

### பச்சிலைப் பள்ளியில்

# 50 ஆயிரம் பனம் விதைகள் நடுகை செயற்றிட்டம்

(கிளிநொச்சி)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் 50 ஆயிரம் பனம் விதைகள் நடுகைசெயற்றிட்டத்திற்கு அமைய கடந்த வெள்ளிக்கிழமை பளைப் பகுதியில் உள்ள தம்பகாமம் கிராமத்தில் 30 ஏக்கர் காணியில் பனம் விதை நடுகை திட்டம் பிரதேச செயலர் எஸ். புத்திசிகாமணியின் தலைமையில் நடை பெற்றது.

இந் நிகழ்வில் பனை அபிவிருத்தி இணைப்பாளர் ஏ. வீ.கே. மாணிக்கம், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனபனை, தென்னை வள பொறுப்பாளர் எஸ். அருள், தமிழீழ நிர்வாக சேவை இணைப்பாளர் தங்கவேல், உட்பட பிரமுகர்கள் பலர் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

பிரதேச செயலர்எஸ்.புத்திசிகாமணி வைபரீதியாக பனம் விதை நடுகையினை ஆரம்பித்து வைத்தார்.

கிளிநொச்சி மாவட்ட பனை அபிவிருத்திச் சபையும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுநிறுவனமும் இணைந்து இந் நிகழ்வை நடாத்தியமை குறிப்பிடத்தக்கது. (க)

# வீதியை திறக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்த 12 வருட காலமாக மக்கள் போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் மூடப்பட்டுள்ள மாதகல்-பெரியவிளான் புனித அந்தோனியார் வீதியை மக்கள் போக்குவரத்துக்கு திறந்து விடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அப் பகுதி மக்கள் வலிகாமம் தென் மேற்கு பிரதேசசபை தலைவர் வெ. அன்ரன் ஜோண்சனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்; (உ)

### 8 பெட்டிகளில்

# சிகரெட் மீட்பு

(கொழும்பு)

துபாய் நாட்டிலிருந்து கட்டுநாயக்கா விமான நிலையத்திற்கு முகவரி இடப்பட்டு வந்த எட்டு பாரிய பெட்டிகளில் 25 இலட்சம் ரூபா பெறுமதியான சிகரெட் வகைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இப்பெட்டிகள் கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்து பல நாட்களாகியும் ஒருவரும் உரிமை கோராததையடுத்து சுங்க அதிகாரிகள் பெட்டிகளை உடைத்து பரீட்சித்துப் பார்த்தபோது இவை கண்டுபிடிக்கப்பட்டன.

சுங்க அதிகாரிகளின் பணிப்பின் பேரில் இப் பெட்டிகளை அரச உடைமையாக்க கடந்த 16 ஆம் திகதி முதல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன; (உ-3)

# முன்பள்ளி திறப்பு

(சுதுமலை)

ஆனைக்கோட்டை பால சுப்பிரமணிய வித்தியாசாலையின் அருகில் புதிதாக அமைக்கப்பட்ட முன்பள்ளி ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை வலிகாமம் வலயக் கல்விப் பணிமனையின் முறைசாராக் கல்விப்பிரிவின் உதவிக் கல்விப்பணிப்பாளர் கே;சிவனேசனால் திறந்து வைக்கப்பட்டது.

இவ் முன்பள்ளியில் பெருமளவு சிறுவர்கள் கல்வி பயில்கின்றனர்; (க-252)

### இயங்கவைக்க

# நடவடிக்கை

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சில்லாலை இலங்கை மாதா சனசமூக நிலையத்தை புனரமைப்புச் செய்து மீண்டும் செயற்பட வைப்பதற்கு சம்பந்தப்பட்ட பிரதேச சபை நடவடிக்கை எடுத்துள்ளது. (உ-232)

### வடக்கு- கிழக்கு

# புனர்வாழ்வு பணிக்கென ஒரு இலட்சம் ஸ்ரேலிங்

(கொழும்பு)

வடக்கு- கிழக்கு பகுதிகளிலுள்ள தமிழ் மக்களின் நலன் பேணும் நடவடிக்கைகளுக்கென லண்டனில் உள்ள ஸ்ரீ கனக துர்க்கையம்மன் ஆலய அறக்கட்டளை நிறுவனத்தினர், அடுத்த ஆண்டு முதல் வருடாந்தம் ஒரு இலட்சம் ஸ்ரேலிங் பவுண்களை இலங்கைக்கு அனுப்பி வைக்க தீர்மானித்துள்ளனர்.

2000 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் 20002 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரை ஒரு இலட்சத்து ஆயிரத்து 936 ஸ்ரேலிங் பவுண்களை உதவி நிவாரணமாக வடக்கு-கிழக்கு பகுதிகளிலுள்ள தமிழர் புனர்வாழ்வுக்காக அனுப்பிவைத்துள்ளது. (க-03)

# அரசியல் கைதிகள் பலர் விடுதலையாக சாத்தியம்

(கொழும்பு)

பயங்காவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் உள்ள தமிழ்க் கைதிகளில் அநேகர் விடுவிக்கப்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களம் தீவிர பரிசீலனையில் ஈடுபட்டுவருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சட்டமா அதிபர் கமலசபேசனை தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் விரைவில் சந்தித்து இது தொடர்பாக பேசவுள்ளனர். (உ-3)

### வன்னியிலிருந்து வந்தோருக்கு

# விரைவில் புதிய வீடுகள் ஐ. நா. வின் உதவியுடன்

(சுதுமலை)

வலி. தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவில் கடந்தகால போர்ச் சூழ்நிலை காரணமாக வீடுகளை இழந்து வன்னியிலிருந்து வந்த மீளக்குடியேறியவர்களுக்கு விரைவில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் உதவியுடன் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது.

இது தொடர்பான கூட்டம் அண்மையில் பிரதேச செயலர் நா; வேதநாயகன் தலைமையில் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் அதிகாரிகளும் கலந்துகொண்டு சில தீர்மானங்களை மேற்கொண்டனர்.

மாதகல், மாரீசன்கூடல், சில்லாலை, பெரியவிளான், இளவாலை ஆகியபகுதி களில் மீளக்குடியமர்ந்து பலவித அசௌகரியங்களுடன் வாழ்ந்துவரும் குடும்பங்கள் அப் பகுதி கிராம உத்தியோகத்தர் ஊடாக தெரிவு செய்யப்பட்டு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளதாக தெரியவந்துள்ளது; (க-252)

மனநலம் மன்னுயிர்க் காக்கம் இனநலம்
எல்லாப் புகழும் தரும்
குறள்

# வலம்புரி

## தமிழ்க் கூடலில் ஒலித்த உண்மை

மானுடத்தின் தமிழ் கூடல்- 2002 நிகழ்வுகள் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் மிக விமரிசையாக நடைபெறுகிறது. இயல் இசை, நாடகம் அடங்கிய முத்தமிழ் ஆய்வரங்காக நடைபெறும் மானுடத்தின் தமிழ்க் கூடல் ஈழத் தமிழரின் போராட்ட வரலாற்றில் பதியப்பட்ட படைப்பிலக்கியங்களை மீள்பார்வை செய்வதாகவும் அமைவதால் அஃது இளம் கல்வியாளர்களுக்குப் பெரும் பயனுடையதாக அமையுமென நம்பலாம்.

19 ந்திகதி ஆரம்பமாகி தொடர்ந்து நான்கு நாட்கள் நடைபெறுகின்ற மானுடத்தின் தமிழ்க்கூடலின் முதன் நாள் நிகழ்வில் கலந்துகொண்டு தொடக்கவுரையாற்றிய பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் ஓர் ஆழமான உண்மைக் கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

'இலங்கை அரசுகள் போராட்டம்நடத்திசுதந்திர விடுதலையைப் பெற்றுக்கொள்ளாத காரணத்தினால் தமிழர்களின் விடுதலைப் போராட்ட உணர்வை அவ்வரசுகளால் புரிந்துகொள்ள முடியாது.விடுதலைவேட்கையை அவர்கள் வெறும் சண்டையாகவே கருதுவார்கள்' என்பதே பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் முன்வைத்த கருத்தாகும் அவர் கூறிய கருத்து மேலோட்டமானதன்று. தனது ஆய்வுப் புலத்தில் கண்ட உண்மையையே அவர் மாநாட்டில் விளம்பியுள்ளார்

கல்வியாளர்களால் மதிக்கப்படுகின்ற பேராசிரியர் சிவத்தம்பி அவர்களின் மேற்போந்த கருத்து ஆத்மார்த்த ரீதியான சிந்தனைக்கு வித்திட்டுள்ளது.

தமிழ் மக்கள் தங்கள் விடுதலைக்காக அகிம்சை ரீதியிலும் பின்னர் ஆயுத ரீதியிலும் போராடிய போதெல்லாம், அப்போராட்டத்தை நசுக்க வேண்டுமென்பதில் சிங்கள அரசுகள் முனைப்புடன் செயற்பட்டனவேயொழிய தமிழர்களுக்கு இருக்கக்கூடியதான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டுமென்ற சிந்தனை அறவே ஏற்படவில்லை.

இதற்குக் காரணம் இலங்கையின் சுதந்திரம் போராடி- இரத்தம் சிந்திப் பெறப்பட்டதல்ல அதனால் விடுதலையின் வேட்கையை உணர முடியாது போயிற்று என்பதாகும்.

# யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில் விறுவிறுப்பான

# ஏழு நாடகங்கள் கொண்ட நூல் 'எங்கள் நாடு'

நூலின் பெயர் - 'எங்கள் நாடு'
நூலாசிரியர் - அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை
பக்கங்கள் - 99+20=119
விலை - ரூபா 75.00

நா. குகராசா
ஒய்வுபெற்ற பொறியியலாளர்

நான் அராலியூர் சுந்தரம பிள்ளையின் நாடகங்களை வானொலியில் கேட்டிருக்கிறேன், பொருத்தமான பின்னணி இசை, திறமான நடிப்பு, தயாரிப்பு ஆகிய வற்றுடன் அவை இதமாக, இனிமையாக இருக்கும். அந்த மேலதிக மெருகுகள் இல்லாது வெறும் நாடகங்களாக வாசிக்கும் பொழுது அவை எப்படி இருக்குமோ என்ற சந்தேகத்துடன்தான் நூலைக் கையில் எடுத்தேன். ஒரே மூச்சில் வாசித்து முடித்தேன்! அவ்வளவு விறுவிறுப்பாகவும் சுவையாகவும் இருந்தன நாடகங்கள்.

அதற்கு இரண்டு காரணங்கள். ஒன்று அவை எங்களது சமகால வாழ்க்கையைத் தத்ருபமாகச் சித்திரிப்பது. இரண்டாவது காரணம் ஐம்பது ஆண்டு காலமாக சுந்தரம பிள்ளையின் நாடக எழுத்தில் ஏறியுள்ள மெருகு!

### தனிக் குடித்தனம்

இலங்கை வானொலியின் தமிழ்ச்சேவை நடத்திய பவள விழா நாடகப் போட்டியில் முதல் பரிசு பெற்ற தனிக்குடித்தனம், ஒரு குடும்பக் கதை மாமி-மருகள பிரச்சினை ஒன்றாக இருந்து குத்துப்படுவதிலும் பிரிஞ்சு தனித்தனியாக, சந்தோஷமாக ஒற்றுமையாக இருககிறது நல்லது தானே என்று பிரச்சினைக்கு ஆசிரியர் கொடுக்கும் தீர்வில், நாட்டின் இனப் பிரச்சினைக் கான தீர்வும் குறிப்பாக உணர்த்தப்படுகிறது.

கல்யாணம் செய்வதற்காகக் கன்னிப் பெண்களை கட்டாயப்படுத்தி, வெளி நாடுகளுக்கு அனுப்பிவைக்கும் பிரச்சினை பற்றியது கல்வியா? கனடா கல்யாணமா?

கலைஞர்களைக் கௌரவிப்பதில் அரசாங்கமும், அது நியமித்த குழுக்களும் கடைப்பிடிக்கும் போலித்தனங்களைச் சுட்டிக் காட்டுகிறது க்லைஞர் கௌரவிப்பு.

### எங்கள் நாடு

1995ஆம ஆண்டு யாழ்ப்பாண இடப்பெயர்வின் போது தமிழ் மக்கள் எங்கெல்லாமோ ஓடினர்! கொழும்புக்குச் சென்ற ஒரு குடும்பத்தின் கதை 'எங்கள் நாடு' இந்த நாடகம், தமிழ் மக்கள் படும் துன்பங்களையும், இனப்பிரச்சினைக்கான தீர்வையும் வெளிப்படையாகவே சொல்கிறது.

இரண்டாம் ஈழப்போர் தொடங்கிய காலத்தில் இருந்து கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் பிரயாணம் செய்தவர்கள் பட்ட துன்பங்கள் சொல்லில் அடங்கா. வெய்யிலில் காவல் நின்று, இராணுவத்திடம் அனுமதி பெற்று அலைந்து திரிந்து, பிளேன் ரிக்கற்றும் கப்பல் ரிக்கெற்றும் பெற்று கஷ்டப்பட்டுப் பிரயாணம் செய்து ... ... அந்தச் சொல்ல முடியாத துன்பங்களில் கொஞ்சத்தைச் சொல்கிறது 'பவள விழா நாடகப்பரிசு' ஆசிரியரது வானொலி நாடக உலகச் சாதனைகளும் இதில் சொல்லப்படுகின்றன.

1996ஆம் ஆண்டு மக்கள் யாழ்ப்பாணததில் மீளக் குடியேறத் துவங்கிய காலத்தில் இங்கு எந்தப் பக்கம் திரும்பினாலும் இராணுவம்! மககள் மூச்சு விடுவதறகே பயந்திருந்த அந்தக் காலத்தை நகைச்சுவை ததும்ப சித்திரித்துக் காட்டுகிறார் ஆசைகளும் அவலங்களும் நாடகத்தில்.

மக்கள் மீளக் குடியேறிய காலத்தில், மற்றவர்களது பொருள்களை எடுப்பதற்கு இங்கு நடந்த போட்டிகளுக்கும் சண்டைகளுக்கும் கணக்கே இல்லை. அந்தக் காட்சிகளையெல்லாம் நகைச்சுவையுடனும் விறுவிறுப்பாகவும் சித்திரிக்கிறது ''அடாத்து'' நாடகம்.

இந்த ஏழு நாடகங்களிலும் நம்பகத்தனமை அற்ற பாத்திரங்களையும், நம்பமுடியாத சம்பவங்களையும் கண்டு பிடிக்க முடியாது!

### யாழ்ப்பாணப் பேச்சு வழக்கு

எல்லாப் பத்திரங்களும தங்களுக்கே இயல்பான யாழ்ப்பாணப் பேச்சு வழக்குத் தமிழில் உரையாடுவதால், உரையாடல் தங்குதடை இன்றி ஓடுகின்றது சூடாகவும் சுவையாகவும் அமைந்த உரையாடல், நாடகங்களுக்கு விறு விறுப்பும் வேகமும் கொடுக்கின்றது.

சுந்தரம்பிள்ளை இலங்கை வானொலியின் தமிழ்ச் சேவைக்கு மட்டும் மகத்தான சேவை செய்யவில்லை.

தமிழ் இலக்கியத்திற்கும் மகத்தான சேவை செய்து வருகிறார். நாடகத்துறை நன்கு வளர்ந்த தமிழ் மொழியில், வானொலி நாடக இலக்கியம் என்ற ஒரு புதிய துறையை வளர்த்து வருகின்றார்.

சுந்தரம்பிள்ளையின் நாடகங்களை இந்த நாட்டு மக்கள் எல்லோரும் கேட்டு மகிழ்ந்திருப்பர். மக்களின் ஆதரவு அவரதுஏனைய நாடகங்களும் வெளிவர வழிவகுக்கும்.

# தன்னைப் பிரபல்யப்படுத்தாது சேவை செய்த

# தனிப்பெரும் ஆசான் தம்பையா இலங்கைநாதன்

## மறைந்தார் மாண்பு

கி. கிருபானந்தா

'வையத்துள் வாழ் வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப் படும்'

என்ற வள்ளுவர் வாக்கிற்கு அமையவையத்துள் வாழ் வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள ஒருவராகிவிட்ட அமரர் தம்பையா இலங்கை நாதன் நேற்று இருந்தவர் இன்று இல்லை இது தான் இந்த உலகின் நியதி.

### மாணவர்கள் புகழ்பெற உழைத்தவர்

அனபினால் அனைவரையும் கவர்ந்து பணிவான வாழ்வதனை ஆயுதமாகக் கொண்டு சாதனைகள பல புரிந்தகர்ம வீரன். நல்ல தோர் ஆசான், திட்டவல்லுநர் திறமை மிக்க நிர்வாகி உற்ற, இடத்து உதவும் உயர்ந் தோன் இலக்கணங்களுடனான இலட்சிய வாதி, உளளத்தால் உயர்ந்த உத்தமன். இப்பெரியார் பல் துறைப் பாண்டித்தியம் மிக்க பல மகான்களை இவ் உலகில் உலவ விட்டார். உலகியல் வெற்றிகளை யெல்லாம் தன் மாணவர்களுக்காக அர்ப்பணித்த தியாகி. மாணவர் புகழ் உலகளாவி விரியதன் புகழைச் சுருக்கிய விந்தை மனிதன். தனனைப் போல் பிறரையும் நேசிக்கும் புண்ணியன்.

### பொதுப் பணி

காட்சிக்கு எழியவராகவும் கருத்திற்கு இனியவராகவும் தெளிந்த சிந்தையராகி கசடறக் கற்பிக்கும் ஆற்றலில் அவரே அவருக்கு நிகராவார்.

ஆசிரியராக நயினா தீவு-கணேசா கனிஷ்ட மகாவித்தியாலயத்தில் சேவையாற்றி அதன் அதிபராகத் திகழ்ந்தார்.

இவர் நயினாதீவு மணிபல்லவ கலா மன்ற ஆரம்ப கால உறுப்பினரும் மன்றத்தின் வளர்ச்சிக்கு தனது இறுதி மூச்சு வரை உழைத்தவரும், சிறந்த ஓவிய விற்பன்னரும் சிறந்த சமூக சேவையாளரும.

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாளுக்கு திருநந்த வனம் அமைத்து பணி செய்த வரும் ஆவார். விழிக்குத் துணையான ஒளியலல விழியேயான ஒளி. முகத்திரண்டு புண்ணிருந்த புலலர்க்கும் கண் கொடுத்துக் காட்டிய ஒளி இவ் வொளியால் ஒளி பெற்ற அகல் விளக்குகள் ஆயிரம் ஆயிரம். இது தன் பிரகாசத்தைப் பிரபல்யப்படுத்த தெரியாத பேதை ஒளி மற்றவர்க்கு இரஙகித் தன்னைத்தான தாழ்த்திக் காட்டும் தண்ணளி பொங்கும் தனியொளி இனித் தெய்வ ஒளியாய்த்திகழும்.

## தினசரி தியானம்

### தோல்வி

தோல்வி வெற்றிக்கான படிக்கல்லாகும்; ஆரம்ப காலத் தோல்விகளுக்காக மனம் விட்டுவிடக் காரணமேயில்லை. நல்ல வைகளை அடைவது வாழ்க்கையில் எப்போதும் கஷ்டமானது என்பதை நீங்கள் கவனித்திருக்கலாம். இதனால் தான் தைரியமும், விடாமுயற்சியும் ஆன்மீகத்தை நாடுபவர்க்கு மிக முக்கியமாகத் தேவைப்படுகின்றன. ஒவ்வொரு தோல்வியும் உங்களுக்குப் பாடம் புகட்டுகிறது. இதனைச் சரியாக ஆராய்ந்து பார்த்து உணர்ந்து பயன் பெற வேண்டும். இப்படியாகத் தோல்விகள் உங்களது வெற்றிக்குப் படிக் கற்களாகும்;

சுவாமி சிவானந்தர்

## நிதிஒதுக்கீடு

(தென்மராட்சி)

யுத்தத்தினால் அழிந்தநிலையில் இருக்கும் தென்மராட்சிக்கு பாராளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப் பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் அப் பிரதேசத்தின் புனரமைப்பு மற்றும் புனர்வாழ்வுப் பணிகளுக்கென 31 லட்சத்து 46 ஆயிரத்து 500 ரூபா மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக சம்பந்தப் பட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க-77)

## நோர்வே பிரதி அமைச்சர்...............

விடார் ஹெல்கீஸன் இன்று திங்கட்கிழமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ,சமா தானச் செயலணியின் தலைவர் பேர்ணாட் குணதிலக ஆகியோரைச் சந்தித்து தாய்லாந்தில் நடை பெற்ற முதல கட்டப் பேச்சு வார்த்தையின் போது எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பா கவும் இரண்டாங் கட்டப் பேச்சு வார்த்தையின் போது எடுக்கபபட வேண்டிய முக்கிய விடயங்கள் குறித்தும் பேச்சுவார்த்தை நடத் துவார்.

**நாளை யாழ்ப்பாணம் வருகிறார்.**

கொழும்பில் பேச்சுவார்த் தையை அடுத்து நாளை செவ் வாய்க் கிழமை ஏ-9 கண்டி வீதி யூடாக யாழ்பாணம் வரவுள்ள ஹெல்கீஸன் யாழ்.அரச அதிபர் எஸ்.பத்மநாதன்,யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தர நாயகம் மற்றும் பிரமுகர்களையும் சந்தித்து கலந்துரையாடுவதுடன் யுத்தத்தி னால் பாதிப்புற்ற பகுதிகளுக்கும் சென்று பார்வையிடுவார்.

**புதன் பிரபாவுடன் சந்திப்பு**

பிரதி அமைச்சர் விடார் ஹெல் கீஸன் தனது யாழ்ப்பாண விஜ யத்தை முடித்துக் கொண்டு புதன கிழமை காலை வன்னிக்குச் சென்று அங்கு தமிழீழ விடுதலைப் புலிக ளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மற்றும் அரசியல் ஆலோ சகர் அன்ரன் பாலசிங்கம், அரசி யல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்செல்வன் ஆகியோரைச் சந்தித்து உரையாடவுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிக ளின் தலைவர் வே.பிரபாகரனை முதற் தடவையாக சந்திக்க வுள்ள விடார் ஹெல்கீஸன் தாய் லாந்தில் முதற் கட்டப் பேச்சில் தீர்மானிக்கப்பட்ட சமாதானச் செயலணி அமைப்பது தொடர்பா வும் இரண்டாம் கட்டப் சமாதான பேச்சுவார்தைக்குரிய முக்கிய விடயங்களை இனங்காண்பது தொடர்பாகவும் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இப் பேச்சுவார்த்தைகளின் போது அண்மையில் கிழக்கு மாகாணத்தில் இடம் பெற்ற அசம்பாவிதங்கள் தொடர்பாக வும் பிரஸ்தாபிக்கப்படவிருப்ப தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

**சந்திரிகாவுடன் பேச்சு**

தமிழீழ விடுதலைப் புலிக ளின் தலைவர் வே.பிரபாகரனு டன் பேச்சுவார்த்தை நடத்திய கையோடு புதன் கிழமையிரவு ஜனாதிபதி சந்திரிகா குமார துங்காவுடனும் அமைச்சர் ஹெல கீஸன் பேசவுள்ளார்.

இப் பேச்சுவார்த்தைகளை அடுத்து வியாழக்கிழமை நோர் வே திரும்பும் அமைச்சர் விடார் ஹெல்கீஸன் யாழ்ப்பாணம், கொழும்பு, வன்னி இடங்களில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் தொடர்பாக நோர்வே அரசுக்கு விளக்கி கூறவுள்ளார் என்று நோர்வே தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன (ம)


# நகராட்சி மன்றம்
## பருத்தித்துறை

**தார் ஏற்றி இறக்கல் கூலிக்கான**

**கூறுவிலை கோரல்**

கொழும்பிலிருந்து நகராட்சி மன்றம், பருத்தித் துறைக்கு பாரவு,ர்தி மூலம் ஏ-9 பாதையு,டாக 142 பரல் (140 லீற்றர் கொள்ளளவு) தாரினை ஏற்றி இறக்க கூலிக்கான கூறுவிலைகள் (பெறுமதி சேர்வரி உட்பட) கோரப்படுகின்றன. கூறுவிலைகள் தலைவர், நகராட்சி மன்றம், பருத்தித்துறை என முகவரியிடப் பட்டு 28.10.2002ம் திகதிக்கு முன்னர் அலுவலக நேரத்தில் கிடைக்க கூடியவாறு அனுப்பிவைக் கப்படல் வேண்டும்.

நா. மணிவண்ணன், ஜே.பி.யு.எம்
உபதலைவர்,
நகராட்சி மன்றம்,
பருத்தித்துறை.

நகராட்சி மன்ற அலுவலகம்,
பருத்தித்துறை.
2002.10.19

[C/5157]



**புதிய தீபாவளி வாழ்த்து மடல்கள்**

சீவம் இண்டஸ்றீசின் தீபாவளி வாழ்த்து மடல்களை பல்வேறு அளவுகளில், பலவடிவங்களில் பெற்றிடவும், பொக்கற் கலண்டர்கள்சினிமா, சாமி, குழந்தை வடிவங் கள் அனைத்தையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் நீங்கள் பெற்றிட நாடுங்கள்

**மக்மிலன் புத்தகசாலை**

இல.3 பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

**ஸ்ரீ காந் புத்தகசாலை**

இல. 165 பஸ் நிலையம்,
மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

[C/5156]


## இலங்கையில்.........

ஒவ்வொரு மாவீரர்தின உரை யிலும் தலைவர் பிரபாகரன் எப் பொழுதும் சமாதானக் கதவு திறந்தே இருக்கிறது எனக் கூறி வந்துள்ளார் இராணுவ ஆக் கிரமிப்பு, அடககுமுறை அகன்று மக்கள் இயல்பு வாழ்க்கை வாழும்நிலை தோற்று விக்கப பட்டால் மட்டுமே இது சாத்தியம்.

தாய்லாந்தில் இடம்பெறவுள்ள இரண்டாம் கட்ட சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக அப் பேச்சுவார்த்தையில் ஆராயப்பட வேண்டிய விடயங்கள் குறித்து தலைவர் பிரபாகரனுடனும் ஆலோ சகர் அன்ரன் பாலசிங்கத்துடனும் கலந்துரை யாடுவதற்கு நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் சமாதானத் தூதுவர் எரிக்சோல்கைம் இலங் கைக்கான நோர்வேத்தூதுவர் ஜோன்வெஸ்பேக் ஆகியோர் இன்னும் சில தினங்களில் கிளி நொச்சிக்கு வருகைதரவுள்ளனர். அதேவேளை தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக தமிழீழ விடுதலைப்புலிகளை சர்வதேசம் ஏற்றுக்கொண்டுள்ளது.

இதன் அடிப்படையிலேயே வெளி நாட்டு பிரதிநிதிகள் வன்னிக்கு வந்து எம்முடன் பல்வேறு விடயங்கள் குறித்து கலந்து ஆலோசிக்க வருகின்ற னர். இது தமிழ் மக்களுக்கு கிடைத்த ஒரு அங்கீகாரம் ஆகும் தற்போதைய சமாதான சூழ்நிலையில் அழிக்கப்பட்ட எமது வடக்கு கிழக்கு பிரதே சங்கள் புனரமைக்கப்பட வேண் டும்.

இநத புனரமைப்பு குறித்து ஆராயவும் அதற்கு தேவையான நிதியுதவிகளை சர்வதேச நாடு களிடமிருந்தும் ஐக்கியநா டுகள் சபை மற்றும் வெளி நாட்டு நிறுவனங்களிடம் இருந்தும் பெறும் பொருட்டும் அரச தரப்பில் மூன்று பேரும் புலிகள் தரப்பில் மூன்று பேருமாக புனர மைப்புத் தொடர்பான செயலணிக குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு நேரடியாக வெளிநாடுகளிடம் நிதியுதவி யைக் கோரும்.

சமாதான முயற்சிகளின் பின் னர் பாதை திறக்கப்பட்டது சிங் களமக்கள் எமது யுத்த பூமிக்கு வந்து பார்த்தார்கள் தமிழர்க ளுக்கு இந்த அவலம் நிகழ்ந்ததா எனமூக்கில் விரல் வைக்கின்றனர்.

இந்தளவு தூரம் நிலைமை களை புரியவைத்தது எமது தள ராத போராட்டம் தான் எனவே போராட்டத்தின் காவியங்களை அழியாது பாதுகாக்க படைப் பாளிகள் முன்வரவேண்டும் என்று புலித்தேவன் மேலும் கூறினார். (த)

## நோர்வேக்கு...

நோர்வே அரசுக்கு எதிரான கோஷங்களுடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த போதும் பிரதி அமைச்சர்விடார் ஹெல்கீசன் தலைமையிலான குழுவினர் அம் பாந்தோட்டை மாவட்டத்திற்கு உதவி வழங்கும் நோக்கத்து டன் அமைச்சர் ஆனந்தகுல ரட் ணாவுடனும்,பிரதி அமைச்சர் சஜீத்பிரேமதாஸாவுடனும் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளதுடன் அம்பாந்தோட்டை செயலக அதி-காரிகளுடனும் அபிவிருத்தித திட் டங்கள் தொடர்பாகக் கலந்துரை யாடியுள்ளனர். (ம)


# வைத்தியம்

செங்கண்மாரி. அல்சர்.
ஆஸ்துமா. வாதநோய்கள்.
வலிப்பு நோய். பீனிசம்.
தலையிடி. தலைகால்
அவியல். சரும நோய்கள்.
மாதவிடாய்க்குத்து.
இரத்தப்போக்கு. வெள்ளைக்
கசிவு. கருவழிதல்.
மகப்பேற்றின்மை. குழந்தை
வைத்தியம். வீரியக்குறைவு.
மூலவியாதிகள். மூத்திர
ரோகங்களில் பிரபல்யமானவர்.

**சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்:**

**வேலணை வைத்திய கலாநிதி**
**சி.இராசரத்தினம்**
121, 2ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 2222459


**வேலணையில் நடந்த**

## புகைப்படக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் சமகாலப் போராட்ட வரலாற் றைச் சித்திரிக்கும் புகைப்படக் கண்காட்சி ஒன்று வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் நடைபெற்றது.

அண்மையில் நடைபெற்ற இப்புகைப்படக் கண்காட்சியை வேலணை கடற் படைப்பிரிவின் பொதுஜனத் தொலைதொடர்பு அதிகாரி லெப்டினட் பிரேமரத் தினாவும், அவரது உதவியா ளரும் பார்வையிட்டதுடன் அங்கு நின்ற போராளியொருவருடன் ''இன்று சமாதானச் சூழல் தானே, நன்றாக இருக்கின்றது'' என்று தமிழில் உரையாடிவிட்டுச் சென்றுள்ளனர்.

தமிழீழவிடுதலைப்புலிகளின் சமகாலப்போராட்ட வரலாற்றில் வெற்றிகளைக்குவித்த ஓயாத அலைகள் ஒன்று, இரண்டு, மூன்று மற்றும் ஜயசிக்குரு நட வடிக்கையை முறியடித்த சமர் ஆகியவற்றைச் சித்திரிக்கும் படங்கள் காட்சிக்கு வைக்கப் பட்டிருந்தன. (ம)

## மானுடத்தின்...

நபர் அதனை மறைக்க முற்பட்ட போது துப்பாக்கி கீழே நழுவி விழுந்ததாகவும்,

இதனை அடுத்து ஒழுங்க மைப்பாளர்களும் மண்டபத்துக்கு வெளியே இருந்த பார்வையாளர் களும் அவரை மடக்கிப் பிடித்து புலி உறுப்பினர்களிடம் ஒப்படைத் ததாகவும் யாழ் மாவட்ட அரசியல் துறையினர தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவத்தினை விடுத லைப்புலிகள் வன்மையாக கண்டிப் பதாக புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில, இத்தகைய சம்பவங்கள் அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்துவ தாகவும் யுத்த நிறுத்த உடன் படிககையின்படி மாற்றுக் குழுக் கள் ஆயுதங்களுடன் நடமாடமுடி யாது. அவ்வாறு நடமாடுவது யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறுகின்ற செயலாக அமையும் என்றும் இத்தகைய சம்பவங்கள் ஏற்படாத வகையில் யுத்த நிறுத் தக் கண்காணிப்புக் குழுவினர் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை மாநாட்டு மண் டபத்துக்கு பிரஸ்தாப புளொட் உறுப்பினரை மோட்டார் சைக் கிளில் ஏற்றி வந்த இன்னொரு நபர் மோட்டார் சைக்கிளையும் போட்டுவிட்டு தப்பி ஓடிவிட்டதா கவும் தெரிவிக்கப்படுகிறது.

இது இவ்வாறு இருக்க போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவி னர் பிரஸ்தாப நபரை யாழ் பொலிஸாரி டம் ஒப்படைத்துள் ளனர். (இ)

## எமது கட்சி.......

கண் காணிப்புக் குழுவின் யாழ் மற்றும் கொழும்பு அலுவலகங்க ளுக்கு அறிவித்துள்ளதுடன் யாழ் பொலிசாரிடமும் முறைப்பாடு செய் துள்ளதாகத் தெரிவித்தனர்.

மாநகர சபை உறுப்பினரான பிரஸ்தாப நபர் அரசாங்கத்தின் அனுமதியுடனேயே கைத்துப் பாக்கி வைத்திருந்ததாகவும், யுத்த நிறுத்த அமைதிச் சூழலில் இத்த கைய வேண்டத்தகாத நடவடிக்கை களைத் தாம் வன்மையாகக் கண் டிப்பதாகவும் தாக்குதலுக்குள் ளான ஜெயா மாஸ்ரர் யாழ் வைத் தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருப்பதாகவும் புளொட் அமைப் பினர் மேலும் தெரிவித்துள்ளனர் எனினும் இச்செய்தி எழுதும் வரை பிரஸ்தாப நபர் அனும திக்கப்பட்டாரா என்பதை உறு திப்படுத்தமுடியவில்லை. (இ)


**SALES SALES SALES....**

வாடிக்கையாளர்களுக்கு ஓர் மகிழ்ச்சிகரமான செய்தி
தீபாவளியை முன்னிட்டு, லைடனின் மகத்தான மலிவு விற்பனை. லைடனில் சகல பொருட்களையும் விசேட விலைக் கழிவுடன் வழங்குகின்றோம். இவ்விலைக்கழிவு

15.10.2002 செவ்வாய்க்கிழமை முதல
04.11.2002 திங்கட்கிழமை வரை மட்டுமே.

**விரையுங்கள் பயன் பெறுங்கள்**

**லைடன் புடைவை நிலையம்**

410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.2222381

[C/5140]



**வடமாகாண மிற்சுயி, அட்லஸ் சீமெந்து வாடிக்கையாளர்களுக்கு ஓர் நற்செய்தி**

**மிற்சுயி (MITSUI), அட்லஸ் (ATLAS) சீமெந்து தயாரிப்பாளர்களான யப்பான் டோக்கியோ சீமெந்து நிறுவனத்தின் மற்றும் ஒரு புதிய தயாரிப்பான**

# ஹினோடே
# HINODE CEMENT

சீமெந்தை அறிமுகப்படுத்தியுள்ளார்கள் என்பதை மிக மகிழ்ச்சி உடன் தெரிவித்துக் கொள்கிறோம். மேலதிக விபரங்களுக்கு - **ஜெசிபா ஏஜென்சி**

**மொத்த விலை - 435/=**

T.P - 021 -2222653,
021 - 2222407

277, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[C/5054]


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.10.2002 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.